
# ஞானச்சுடர்




புரட்டாதி

2024

321ஆவது மலர்

ஓம் முருகா

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத ஆறு.**


**பொருள் :** கற்றவனுக்குத் தனது நாடும் ஊருமேயன்றி யாதானுமொரு நாடும் நாடாகும்; யாதானுமொரு ஊரும் ஊராகும்; இவ்வாறாயின் ஒருவன் தான் இறக்கும் வரையும் கல்லா திருப்பது எதற்காக? (397)

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்(கு)**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

**பொருள் :** ஒருவனுக்கு அவன் ஒரு பிறப்பிற் கற்ற கல்வி அறிவு வரும் பிறப்பிலுஞ் சென்று உதவும். (398)

---

# நற்சிந்தனை



*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**கும்மி**


அடிக்கீ ழரக்கன் கிடக்கி றானடி
அங்கையி லேமழு மானடி
துடியொ ருகையில் தோன்றுதடி பெண்ணே
சூலமுங் கையிற் றுலங்குதடி 04

குடிமு முதையும் ஆண்டுகொண் டானடி
கொல்லும் நமனை யுதைத்தான்டி
அடிமு டியொன்று மில்லையடி பெண்ணே
ஆனந்த மாய்க்கும்மி பாடடி 05

தூக்கிய பாதத்தின் தோற்றத்தைப் பாரடி
தொந்தோந் தோமென்ற நாதத்தைக் கேளடி
ஆக்கி யழிக்கவும் வல்லவ னவனடி
ஆனந்த மாய்க்கும்மி பாடுமடி 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 321

2024 **பொருளடக்கம்** புரட்டாதி


| | | |
|---|---|---|
| சந்நிதியான் ஆச்சிரமத்தில்... | ச. சஜீலன் | 01 - 04 |
| அரிய மானிடப்பிறவி | பு. கதிரித்தம்பி | 05 - 06 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 07 - 10 |
| தமிழர் கண்ட பரம்பொருள் | இரா. செல்வவடிவேல் | 11 - 13 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 14 - 15 |
| ஆயிரம் பிறையாளன்... | கே.எஸ். சிவஞானராஜா | 16 - 18 |
| அன்னையின் அருள் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 19 - 20 |
| இரும்புதரு மனமும்... | முருகவே பரமநாதன் | 21 - 25 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 26 - 28 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 29 - 32 |
| வில்வத்தின் மகிமை | வி. செல்வரத்தினம் | 33 - 36 |
| ஆச்சிரம சுவாமிகளின்... | செல்வி கு. தயாளினி | 37 - 40 |
| சூரியன் எமக்கு தரும்... | திருமதி பொ. திலகவதி | 41 - 42 |
| எல்லாம் அவன் செயல் | பொ. பாலேஸ்வரன் | 43 - 44 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# ஆவணி மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் ஆவணி மாத (320) மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபர் இரா. ஸ்ரீநடராசா அவர்கள் ஆற்றினார்கள்.


அன்றைய நிகழ்வுக்கு வெளியீட்டுரை ஆற்ற வருபவர் வராத காரணத்தால் அவரது கருத்து வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையாக அமைந்திருந்ததை கேட்கக்கூடியதாக இருந்தது.



அவர் தனது ஆரம்ப உரையில் இம் மலர் வெளியீடு செய்யத் தொடங்கிய காலம் முதல் இம் மலரோடும் நானும் பயணம் செய்திருக்கின்றேன். அதற்குக் காரணமாக அமைவது இம் மலருக்குரிய அட்டைப் படத்தை வரைந்தமையே ஆகும். அதன் பிரகாரம் வருடா வருடம் வெளிவரும் தைமாத மலருக்கு மெருகேற்றுவதற்காக அட்டையில் சிறு சிறு மாற்றங்களைக் கொண்டுவந்து மலர் வெளியீடு இடம்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

320 மாத காலமாக ஒரு ஆன்மீக மலர் மாதம் தவறாது வெளிவருவது என்றால் அது ஒரு சாதாரண விடயம் அல்ல. சந்நிதி வேலவனது பெரும் கருணையோடு ஆச்சிரம சுவாமிகளின் அர்ப்பணிப்பான செயற்பாடு என்றே கூறவேண்டும். இவ்வகையில் இம் மலர் வெளிவரும் காரணத்தால் இம் மலருக்குரிய மதிப்பீட்டுரை ஆற்றுவது என்பது எமக்கு அப்பாற்பட்ட செயலாகவே தோன்றுகின்றது என்று கூறி மலரில் இடம்பெற்ற ஒரு சில கட்டுரைகளின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு



அம் மாத மலருக்குரிய சிறப்புப்பிரதி வழங்கும் நிகழ்வையும் செயற்படுத்தி மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நாம் எல்லோரும் நம் வாழ்வு உயரவேண்டும் என்னும் சிந்தனையோடுதான் செயலாற்றி வருகின்றோம். ஆனால் உயர்வு பெற்றவர், பெறுகின்றவர் ஒரு சிலரே ஆவார். அதற்கு என்ன காரணம்? உயர்வு அடைய வேண்டும் என்று எண்ணுகின்றோமே தவிர அதற்குரிய வழி வகைகளை நாம் சிந்திக்கின்றோமில்லை. சிந்தித்து அதற்கு அமைவாக நாம் நடப்பதில்லை.

மனம் போல் வாழ்வு என்பார்கள். அதாவது எமது வாழ்வு எம் மன நினைவிற்கு தக்கவாறுதான் அமையும். நல்ல நினைவுடன் இருந்தால் அதாவது எம்மைச் சார்ந்தவர்களும், சமூகமும் நன்றாக வாழவேண்டும் என்னும் சிந்தனை நமதுள்ளத்தில் பதிந்து இருந்தால் எமது வாழ்வு சிறக்கும். உயரும்.

''கெடுவான் கேடு நினைப்பான்'' என்பது முதுமொழி. பிறருக்கு கேடு செய்ய எண்ணுபவன் தான் கெடுவதோடு தனது சந்ததியினருக்கும் அந்த எண்ணத்தை வளர்த்து விடுகின்றான். எனவே நாம் ஒவ்வொருவரும் நம் மனத்தில் மாசு இல்லா வகையில் வாழ முயற்சிக்க வேண்டும்.

மனதிலே மாசு இல்லாது இருத்தல் அனைத்து அறமும் ஆகும். அழுக்குத் துணியில் மேலும் மேலும் அழுக்குப் படிவதுபோல் அற நூல்களைப் படிக்காத, அறிவுரை களைக் கேளாதவர் மனதில் மாசு படியும். மாசு உடைய மனத்தை உடையவர்களது எண்ணங்கள் எதுவும் நிறைவேறாது. மாசில்லாத மனத்தை உடையவர் நினைத்த கருமங்கள் இறையருளால் இலகுவில் கைகூடும். அவரது உள்ளத்தில் உயிர்ப்பொருளான இறைவன் எழுந்தருளியிருப்பான்.

எனவே ஊரார் நலமாக வாழ வேண்டும், உலகோர் நலமாக வாழ வேண்டும், உயிர்கள் யாவும் இன்பமுற வேண்டும் என்று நினைப்பதன் மூலம் எமது வாழ்வையும் வளமாக்குவோம். நமது உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வு பெற முடியும். இவ்வகைச் சிந்தனைகளோடு நாமும் எமது சமூகமும் செயலாற்றும்பொழுது எல்லாவித நன்மையையும் அடையமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr. K. இராதாகிருஷ்ணன்**
(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**இராசையா குகதாசன்**
(யாழ்ப்பாணம்)

**சி. கனகசபை**
(யாழ்ப்பாணம்)

**அ. மகேந்திரராசா**
(மல்லாகம்)

**சி. செல்லையா**
(கரவெட்டி)

**M.S.K. மகேஸ்வரன்**
(கொக்குவில்)

**க. கிரிவேல்**
(மட்டுவில்)

**வ. கதிர்காமநாதன்**
(சுண்ணாகம்)

**க. பத்மநாதன்**
(கோப்பாய்)

**K.S. கணபதிப்பிள்ளை**
(கைதடி)

**தி. கோபாலகிருஷ்ணன்**
(புத்தூர்)

**உரிமையாளர்**
(விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வே. தர்மராசா**
(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

**செ. புவனேந்திரராசா**
(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**
(இளை.அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**
(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தன்**
(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**ப. நடராசாக்குருக்கள்**
(ஆவரங்கால், புத்தூர்)

**இ. ராதாகிருஷ்ணன்**
(ஏழாலை மத்தி, ஏழாலை)

**க. ஸ்ரீஸ்கந்தராசா**
(இளை. அதிபர், அச்சுவேலி)

**சோ. தனராசா**
(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

**நாகேந்திரம் கண்ணம்மா**
(மானிப்பாய்)

**வ. கந்தசாமி**
(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

**சி. சிவச்செல்வம்**
(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

**கு. மதனமோகன்**
(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

**ஆ. திருநாவுக்கரசு**
(இணுவில் மேற்கு)

**நா. கனகலிங்கம்**
(தபால் வீதி, கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**B.R. ரஞ்சன்**

(சர்வதேச லயன்ஸ் கழக உறுப்பினர், யாழ்ப்பாணம்)

**சி. லிங்கேஸ்வரி**

(மதவடிலேன், சுதுமலை)

**சு.சண்முகசுந்தரம்**

(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**க. தெய்வானைப்பிள்ளை**

(V.M. றோட், பருத்தித்துறை)

**பார்த்தசாரதி விஜயகுமார்**

(சுழிபுரம்)

**திருமதி. ப. தேவமனோகரன்**

(கந்தபுஷ்கரணி, நவாலி)

**அ. ஆறுமுகம்**

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

**கயிலைநாதன் மங்களகாந்தி**

(வேழலகம், ஆனைக்கோட்டை)

**இ. இந்திரலிங்கம்**

(இணுவில் கிழக்கு)

**இ. சர்வேஸ்வரன்**

(கலைவாணி வீதி, கோண்டாவில்)

**த. விசயகுமாரன்**

(பழம்றோட், கந்தர்மடம்)

**செல்வி.சு. பகீரதி**

(செட்டித்தெரு, நல்லூர்)

**கனகேஷ்வரன் பிரகாஷ்**

(கைதடி கிழக்கு)

**சி. செல்வரத்தினம்**

(நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐ. ராமச்சந்திரா**
(லவ்லேன், உடுவில்)
**சி. சகுந்தலாதேவி**
(வங்களாலேன், மல்லாகம்)
**அ. ராஜ்சங்கர்**
(உரும்பராய்)
**கு. நாகேஸ்வரி**
(நவிண்டில்)
**த. லதாசந்திரிக்கா**
(மகாத்மா வீதி, நெல்லியடி)
**க. நற்குணராஜா**
(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)
**செ. இராஜேஸ்வரி**
(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)
**செ. நிமலராஜ்**
(கோப்பாய்)
**த. பூபாலன்**
(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)
**கா.ஆ. சச்சிதானந்தம்**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)
**தினேஸ் கவிதா**
(ஆவரங்கால்)
**சி. சிவசுப்பிரமணியம்**
(அச்சுவேலி)
**ஸ்ரீ. ரோசாதேவி**
(புத்தூர்)
**செ. சோதிப்பெருமாள்**
(சரஸ்வதி மஹால், இணுவில்)
**சி. வேலாயுதம்**
(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இரு நாள்

– *திரு சண்முகலிங்கம் சஜீலன்* அவர்கள் –

தெய்வீக அருள் சுரக்குமிடம் செல்வச்சந்நிதி ஆலயமாகும். சந்நிதியின் அருட்பொலிவை மெருகூட்டும் இடம் ஆலயத்தின் கிழக்குப்புற வீதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமமாகும். பல சமூக, சமுதாய, ஆன்மீகப் பணிகளின் தோற்றுவாயாக விளங்குவது சந்நிதியான் ஆச்சிரமம் என்றால் மிகையில்லை. இறை அநுபூதி பெற்ற பலர் நடமாடித் திரிந்த இடமும், மக்கள் பணியினை இறை பணியாகக் கருதிச் செயற்படுத்தப்படும் இடமும் இதுவேயாகும். இத்தகைய தெய்வீக அருள் நிறைந்த ஆச்சிரமத்திற்கு ஓய்வுபெற்ற இசை ஆசிரியரும் ஞானச்சுடர் மலரில் பல ஆன்மீகக் கட்டுரைகள் எழுதிவரும் எழுத்தாளருமான கலாபூஷணம் கே.எஸ். சிவஞானராஜா ஐயாவும் நானும் பயணம் செய்தோம். எமது பயணம் இரு வெவ்வேறு நாட்களில் அமைந்தது. முதற் பயணம் 15.05.2024இல் அமைந்தது.

அன்று காலை செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் சென்று வேற்பெருமானை வழிபட்டு விட்டு 09.30 மணியளவில் ஆச்சிரமத்திற்குச் சென்றோம். ஆச்சிரம வாயிலை அடைந்ததும் திரு மோகனதாஸ் சுவாமிகள் எம்மை வரவேற்று உபசரித்தார்கள். நாம் ஆச்சிரமத்திற்கு வருவது பற்றியும், வருகைக்கான நோக்கம் பற்றியும் சுவாமிகள் முன்பே உணர்ந்திருந்தார் என்பதை அவரது உரையாடலின் மூலமாக அறியக்கூடியதாக இருந்தது. உண்மையில் எம் இருவரது பயணமும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளையும், ஆச்சிரமத்தால் செயற்படுத்தப்படும் பல பணிகளையும் அறிந்துகொள்வதாகவே இருந்தது. ஆச்சிரமத்தில் அன்றாடம் நடைபெறும் பணிகள் பலவாகும். அவற்றுள் மிக முக்கியமானது நித்திய அன்னப் பணியாகும். ஒவ்வொரு நாளும் ஆச்சிரமத்திற்கு வரும் அன்பர்களுக்கு அன்னம் அளிக்கப் படுகிறது என்பதும் அன்னதானப்பணியில் பல தொண்டர்கள் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதும் எமக்கு முன்பே தெரியும். எனினும் நாங்கள் ஒரு நாளை அல்லது ஒரு நாளின் பல மணி நேரங்களை ஆச்சிரமத்தில் செலவிட்டால்த்தான் ஆச்சிரமத்தின் பல செயற்பாடுகளையும், பணிகளையும் நடைமுறை அனுபவ வாயிலாக நேரடியாகக் கண்டறிய முடியும் என கே.எஸ். சிவஞானராஜா ஐயா சொன்னார். அதன்படி செயற்பாடுகளை அறிந்துகொள்வது எனத் தீர்மானித்தோம்.

காலை 09.45 மணியளவில் ஆச்சிரமத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் சுவாமிகளின் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக்கொண்டோம். அதன் பின்னர் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதா மாதம் வெளியீடு செய்யப்படும் ஞானச்சுடர் மலரின் வெளியீட்டுப் பிரிவையும் அதன் பணிகளையும் பார்வையிட்டோம். ஞானச்சுடர் மலர் ஆச்சிரமத்திலுள்ள அச்சகத்திலேயே தயாராகுவதுடன் இதன் காத்திரமான வெளியீட்டில் மோகனதாஸ் சுவாமிகளுடன் இணைந்து பலர் பணியாற்றுகின்றனர். மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டின் கணனிப்பிரிவு, அச்சகப்பிரிவு, மலராக்கப்பிரிவு அதாவது புத்தகமாகக் கட்டும் பகுதி ஆகியவற்றைப் பார்வையிட்டதுடன் அதன் பணிகளையும் தொண்டர்களிடம் கேட்டறிந் தோம். மலர் வெளியீட்டுப்பணி மிகப்பாரிய பணியாகும். அதுவும் மாதம் மாதம் ஒரு மலரை வெளியிடுவதென்பது மிகச் சிரமமான காரியமாகும். எனினும் இங்கு இப்பணி மிக அமைதி யாகவும் எளிமையாகவும் நடைபெறுகிறதென்பது எம்மை வியக்கவைத்த செய்தியாகும்.

மலர் வெளியீட்டுப்பிரிவிலிருந்து வெளியில் வந்ததும் பிரதான மண்டபத்திற்குள் நுழைந்தோம். இங்கு ஆச்சிரமத்தின் சுவர்களில் சித்தர்கள், ஞானிகள், யோகிகளின் திரு உருவப்படங்கள் மாட்டப்பட்டுள்ளதை அவதானித்தோம். அவை தமிழகத்திலும், ஈழத்திலும் வாழ்ந்து முத்தியடைந்த சித்தர்களது திருவுருவப்படங்களாக இருந்தது. அதிலும் குறிப்பாக செல்வச்சந்நிதி சூழலில் வாழ்ந்து முத்திபெற்ற பல சித்தர்களின் திருவுருவப்படங்களையும் அவதானிக்க முடிந்தது. இது சித்தர்கள், ஞானிகள் பலரையும் சந்நிதியான் ஆச்சிரமம் ஆவணப்படுத்த எடுத்த முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதை உணரமுடிந்தது. இது தவிர சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் வாராந்த வெள்ளி நிகழ்வுகள், வைகாசிப் பெருவிழா, குருபூசைத்தின நிகழ்வுகள், திருவாசக முற்றோதல், திருவாசகப் பெருவிழா, ஆச்சிரமத்தால் செயற்படுத்தப்படும் அறக்கொடைப் பணிகள் என்பவற்றின் புகைப்படத் தொகுப்புக்களும் காணப்பட்டன. அவற்றினைப் பார்வையிட்டதுடன் பதிவு செய்தும் கொண்டோம்.

பின்னர் மதியம் ஆச்சிரம பூசை வழிபாட்டில் கலந்துகொண்டதுடன் மதிய உணவையும் அருந்தினோம். இன்று சுமார் எழுபது எண்பது பக்தர்கள் எம்முடன் ஒரே நேரத்தில் மதிய உணவை அருந்தினர். இன்று வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஒரு நாளாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. நாங்கள் உணவருந்தி முடிந்ததும் வெளியே வரும்போது பாடசாலை யொன்றின் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆச்சிரமத்திற்கு வருகை தந்தனர். அவர்கள் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றின் மாணவர்களாகும். கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்கள் அனைவரும் சந்நிதியான் ஆச்சிரமத்திலேயே மதிய உணவை அருந்தினர். இதற்கான ஏற்பாடுகளை மோகனதாஸ் சுவாமிகள் செய்திருந்தார். ஒரு நாளில் எத்தனைபேர் வந்தாலும் அவர்கள் அனைவருக்கும் அன்னம் அளிக்கப்படுகிறது. பசியுடன் யாரும் திரும்பிச் செல்வதில்லை. தொண்டர்களும் எதுவித மறுப்போ, சலிப்போ இன்றி அனைவருக்கும் உணவு பரிமாறுகின்றனர். தேவையானவர்களுக்கு கேட்டுக் கேட்டு மறுமுறையும் அன்னம் அளிக்கின்றனர். நித்திய அன்னப்பணியென்பது இங்கு மகேசன் பணியாக மேற்கொள்ளப்படுகிறது.

நாம் எமது மதிய உணவிற்குப் பின்னர் மோகனதாஸ் சுவாமிகளுக்கு அவரது ஆச்சிரம சேவைகளைப் பாராட்டி பல்வேறு நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட விருதுகள், சான்றிதழ்கள், நினைவுப் பரிசில்கள் ஆகியவற்றையும் பார்வையிட்டோம். அவை அலுமாரியில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கே.எஸ். சிவஞானராஜா ஐயா அவர்கள் இவை எல்லாவற்றையும் தனது கையடக்க தொலைபேசியின்மூலம் புகைப்படங்களாகப் பதிவுசெய்து கொண்டார். சந்நிதியான் ஆச்சிரமம் பற்றிய எழுத்தாவணப் பதிவுகளுக்கு இவை அவசியம்

*மணிக்கணக்கில் பேசுவதைவிட குறைந்த அளவு காரியங்கள் செய்வது மேலானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை எனக் கூறினார். கே.எஸ். சிவஞானராஜா ஐயா எழுத்தாளராக பல ஆன்மீகக் கட்டுரைகள், கவிதைகளை ஞானச்சுடர் மலரில் எழுதி வருபவர். அத்துடன் கோயில்களில் புராணபடனம், திருமுறை ஓதுதல், இசைக்கச்சேரி ஆகியவற்றையும் செய்து வருகின்றார். சந்நிதியான் ஆச்சிரமத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த முதுபெரும்புலவர் அமரர் வை.க. சிற்றம்பலம் ஆசிரியர் அவர்களது மகனுமாவார்.

நாங்கள் சுவாமிகளுக்கு வழங்கப்பட்ட இவ் விருதுகள், பரிசில்களைப் பார்த்து ஆச்சரியமடைந்து கொண்டிருந்தவேளை சுவாமிகளோ அதனைப் பொருட்படுத்தாது தனது அன்றாடப் பணிகளில் மூழ்கியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சுவாமிகளைப் பொறுத்தவரை அவருக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டேயல்ல. எல்லாவற்றுக்கும் அவன்தான் காரணம் (சந்நிதி வேலவன்) என்று கூறி அமைதியாகவும் எளிமையாகவும் இருந்துவிடுவார். ஆச்சிரமத்துக்கு வரும் எல்லோரிடமும் சுவாமிகள் கூறியது ஒரேயொரு விடயம்தான். அவன் இருக்கின்றான் (முருகப்பெருமான்) அவனை முழுமையாக நம்புங்கள். அவன் அருள் கிட்டும் என்பதாகும். இதனைக்கேட்ட அனைவரும் அதனை நன்குணர்ந்தவாறே ஆச்சிரமத்தைக் கடந்து சென்றனர். நாங்களும் அனுபவத்தில் கண்டுணர்ந்த இவ்வுண்மையுடன் அன்றையதினம் சுவாமிகளிடமிருந்து விடைபெற்றோம்.

மீண்டும் எமது இரண்டாவது பயணம் 29.05.2024 அன்று அமைந்தது. வழமைபோல் ஆச்சிரமத்திற்குச் சென்றோம். காலை உபசரிப்புடன் சுவாமி அவர்கள் எம்மை வரவேற்றார். ஆச்சிரமத்தின் காலைப் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு சுவாமிகளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டோம். இதே நேரம் காலை 09.45 மணியளவில் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரும் ஆச்சிரமத்தின் பல பணிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு மிக நீண்ட காலம் செயற்பட்டுவருபவருமான ஞானபண்டித ஆன்மீக வித்தகர் ஆ. சிவநாதன் ஐயா ஆச்சிரமத்திற்கு வந்திருந்தார். நாம் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகள், பணிகள் பற்றி அவரிடம் வினவினோம். அவர் அதுபற்றிய பல விடயங்களையும் கே.எஸ். சிவஞானராஜா ஐயாவுக்கும் எனக்கும் எடுத்துக் கூறினார். ஆச்சிரமத்தின் பணிகள் சம்பந்தமான சில ஆவணங்களை எமது பார்வைக்கு தந்ததுடன் மோகனதாஸ் சுவாமிகளின் அனுமதியுடன் ஆச்சிரமத்தால் இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைச் செய்தித் துணுக்குகள் ஆகியவற்றையும் எமது பார்வைக்குத் தந்தார். இதன்மூலம் ஆச்சிர மத்தால் செயற்படுத்தப்பட்டுவரும் முன்னிலைப் பணிகளின் விரிவாக்கத்தையும் வளர்ச்சியையும் அறிந்துகொண்டதுடன் தற்போது பல புதிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படு வதையும் அறியக்கூடியதாக இருந்தது. அத்துடன் ஆ. சிவநாதன் ஐயா, கே.எஸ். சிவஞானராஜா ஐயாவுக்கு ஒரு முக்கியமான விடயத்தையும் கூறினார். அதாவது செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு ஒருமுறை சிவயோக சுவாமிகள் வந்திருந்தாராம். அப்போது ஆலயச் சூழல் எங்கும் சிவலிங்கங்கள் காட்சியளிப்பதாகக் கூறி சுவாமிகள் அவ்விடத்தில் கால் வைக்க மறுத்து திரும்பிச் சென்றாராம். சிவயோக சுவாமிகள் ஒரு ஆலயத்திற்கு சென்றால் அவ் ஆலயத்தில் ஏதாவதொரு சிறப்பு உண்டென்றும், அவ் ஆலயம் சிறக்கும் என்றும் அக்காலத்தில் கூறுவார்கள்.

*அன்பின் வலிமை வெறுப்பின் வலிமையைவிட மிகப்பெரியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர் சந்நிதி ஆலயத்தில் கால் வைக்க மறுத்த சம்பவத்தைக் கேட்டபோது எமக்கு மெய்சிலிர்த்தது. இதன்போது சிவநாதன் ஐயா இன்னொரு விடயத்தையும் கூறிவைத்தார். அதாவது சந்நிதி ஆலயச் சூழலில் நடமாடும் பறவைகள், விலங்குகள் உட்பட எந்தவொரு உயிரினத்தையும் யாரும் துரத்துவதோ, அப்பால் செல்லுமாறு கூறுவதோ இல்லையாம். ஏனெனில் அவை முருகப்பெருமானின் விருப்பத்திலேயே அங்கு நடமாடுகின்றன என்பது பக்தர்களின் ஐதீகம். இறைவன் உயிர்கள்மேல் பெருங்கருணை உள்ளவன். உலகில் அத்தனை உயிரினங்களின் அசைவிலும் இயக்கத்திலும் இறைவன் உள்ளான் என்பது சைவசமயம் கூறும் தத்துவம். அது ஏட்டிலும் உள்ளது. அதனை இங்கு நடைமுறையில் கண்டு அனுபவிக்க முடிவது அதிசயமும் அற்புதமுமாகும். இவ்வாறாகப் பல அதிசயங்களும் அற்புதங்களும் சந்நிதியிலும் ஆச்சிரமத்திலும் அனுதினமும் நிகழ்கிறது என்பது இறை அருளின் வெளிப்பாடாகும். அத்தகைய இடத்திற்கே நாமும் வந்திருக்கிறோம் என்பது நாம் பெற்ற பெரும் பாக்கியமாகும் என்று உணர்ந்ததுடன் அன்றைய ஆச்சிரமத்தின் மதியப் பூசை வழிபாடுகளிலும் கலந்து கொள்கிறோம். அதன் பின்னரான மதிய உணவையும் ஆச்சிரமத்தில் நிறைவு செய்துகொண்டு மோகனதாஸ் சுவாமிகளிடமிருந்து விடைபெற்று 02.30 மணியளவில் புறப்பட்டோம். இவ்வாறு எமது பயணம் இரு நாட்களும் சிறப்பாக அமைந்ததென்பது இறை சித்தியாகும்.

---

## மண்ணுலகில் விண்ணுலகம்

*வெறுப்பு இருபுறமும் வெட்டுகின்ற வாளினைப் போன்றது. உன் எதிரியைத் தாக்கத் தவறினால் சீற்றத்துடன் திரும்பி வந்து தன்னை அனுப்பியவனையே அழிக்கும் தன்மையுடையது. சூனியக்காரர்களின் மந்திர சக்தியைப் போன்றது. அதனால் வெறுப்பினை மறந்து விருப்பமாகிய அன்பினை வளர்த்துக் கொள்ளுங்கள். பகைவனைத் தாக்கும்போது அவனுள்ளிருக்கும் இறைவன்மீது அன்பு செலுத்துங்கள். அப்போது உங்கள் இருவருக்கும் இடையே நரகம் கிடையாது.*

*மன்னிக்க முடியாத குற்றங்களாக இருப்பவை கொடுமையும் அற்பத்தனமும்தான். இவை இரண்டும் எங்கும் பரவி குற்றங்களை உண்டுபண்ணுகின்றன. பிறரை வெறுக்கும் குணமுடையவர்கள், முதலில் தங்களிடமுள்ள இத் தீய குணங்களை ஒழித்துக்கட்ட முயற்சி செய்ய வேண்டும். பெருந்தன்மையையும் தாராள மனப்பான்மையையும் வளர்த்துக் கொண்டால் மனிதன் விண்ணுலகத்தையே மண்ணுலகிற்குக் கொண்டுவர இயலும்.*

*வெற்றி தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை. நான் தோல்வியடைந்தேன் என்று யாரும் குறைபட்டுக்கொள்ளத் தேவையில்லை. வெற்றிக்கான பாதையில்தான் நாம் அனைவரும் சென்று கொண்டிருக்கிறோம். வெற்றி சிலருக்கு கொஞ்சம் தாமதமாகக் கிடைக்கிறது, சிலர் வெற்றியை நோக்கி சுற்றிவளைத்து செல்வதால் தாமதமாகிறது.*

*விடாமுயற்சி மட்டுமே நம் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிய மானிடப்பிறவி

**– திரு ப. கதிரித்தம்பி** அவர்கள் –

பண்டைய கல்வி அறிவில்லாக் காலத்தில் இந்திய தமிழ்நாட்டில், இறைவனால் அனுப்பப்பட்ட தெய்வீக மணியாகத் தோன்றியவர்தான் தெய்வீகம் படைத்த ஔவைப் பிராட்டியார் ஆவர். மனிதப்பிறவியின் மேன்மையை அவர் "அரிது அரிது மானிடராதல் அரிது" அதிலும் அரிது "கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது. அதனிலும் அரிதில் அரிது ஞானமும் கல்வியும் உடையவராகப் பிறத்தல் அரிது" என அருளியுள்ளார். அருமைப் பிறவியில் ஞானம் கல்வியை அரிதில் அரிது என்று கூறியது விசேட சிறப்பாகும். மனிதன் ஞானம், கல்வி, அறிவு மறப்பதற்கு மண் ஆசை, பொன்னாசை காரணமாகின்றது. மனிதன் இவ்விரு ஆசையினால் பிறநாட்டை அபகரித்து நாட்டு வளங்களை சூறையாட விரும்புகின்றான்.

தெய்வப்பெண் கூறியதை அறிந்தும் நாட்டைப் பிடிக்கும் ஆசையில், மதிகெட்டு குண்டுமழை பொழிந்து மனித உயிர்களைப் போக்குகின்றான். மண்ணாசையினால் உயிர் களைக் காப்பாற்றும் எண்ணமில்லை. குண்டுகளால் கை, கால் இழந்து கதறும் மக்களை எண்ணிப்பார்க்கிறானில்லை. இஸ்ரேல் என்னும் வல்லரசு காசாமீது குண்டு மழை பொழி கின்றான். இருபத்துநான்கு மணித்தியாலத்தில் ஊரைவிட்டு வெளியேறுங்கள் என்று மக்களுக்கு ஆணை இடுகின்றான். சொன்ன மணித்தியாலத்தில் எவ்வாறு வெளியேற முடியும் என்பதையும், மண் ஆசையினால் சிந்திக்க முடியவில்லை. மக்களின் அவல ஓலம் அவன் காதில்படவில்லை. இதுபோல் ரஷ்யாவும் ஈராக்மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்துகிறது. ஐ.நா. சபை தாக்குதல் நடத்தவேண்டாமென்று கூறியும் கேட்பாரில்லை. மனித உயிரின் அருமை பெருமையை அறியாதவன் நடக்கின்றான். விஞ்ஞானியாகப் பிறப்பவன் மனிதன். விஞ்ஞானி கண்டுபிடித்த தொலைநோக்குக் கருவிகள், மனிதனை வீட்டில் இருந்தவாறு உலக மக்களுடன் நொடிப் பொழுதில் உரையாடுகின்றான். கதைப்பவர்களின் உருவத்தையும் கருவியில் பார்க்கிறான். அதிவேக விமானங்களையும் கண்டுபிடித்ததனால் மனிதன் விரைவாக வெகுதூரத்தையும் சென்றடைகின்றான். பல காலம் பல நேரம் செலவு செய்து தூரங்கள் சுருங்கிவிட்டன. இதனால் கடமைகளை விரைவாக செய்து முடிக்கின்றான். அப்படியான விஞ்ஞானியின் வழி நின்று மனித உயிர்களை அழிக்கும் செயல்களை நிறுத்துங்கள். இதனால் நாடு நலம் பெறும். மனித உயிரின் பெருமையும் புலப்படும்.

மனித வாழ்க்கையில் நோயற்ற வாழ்வாக வாழ சிறந்த மருந்துகளைக் கண்டுபிடித்து, வழங்குவதால் நோய்கள் நீங்கப்பெறுகின்றன. அறுவைச் சிகிச்சைமூலம் நோய்களைக் குணப்படுத்துகின்றனர் வைத்தியர்கள். ஆறு அறிவுடைய மனிதன் ஓரறிவு முதல் ஐயறிவுடைய உயிரினங்களுக்கு வாழ உதவி புரிகின்றான். ஆறறிவினால் தான, தருமங்கள் புரிகின்றான்.

*தலையிலிருந்து கால்வரை ஒவ்வொரு நரம்பிலும் செயல் துடிக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் அறச்சாலைகளையும் கோவில்களையும் கட்டி இறைவழிபாடு செய்கின்றான். வினை நீக்க பூமிக்கு அனுப்பப்பட்ட மனிதன் ஆசைகளை நீக்க தினமும் கோவில் செல்ல வேண்டும். இறைவனும் எமது வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றான். கலியுகக் கடவுள் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் மக்களுக்கு அருள்சொரிய வேலும் மயிலுடனும் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றான். கடற்கரையான் தலம் சென்று, வழிபட அருள் பிறக்கும். நல்லெண்ணங்கள் மனதில் தோன்றும் நற்காரியங்கள் செய்வீர்கள். வாழ்க்கை சிறப்பாகவும் சந்தோசமாகவும் அமைந்துவிடும். முருகனை வழிபட்டு எத்தனை பேர் நோய் நீக்கம்பெற்று வாழ்ந்ததை நாம் அறிவோம். அரிய மானுடப்பிறப்பை உணர சந்நிதியான் வழி செய்வான்.

விஞ்ஞான உலகில் மனிதன் பல நன்மைகளைப் பெறுகின்றான். இறை நம்பிக்கையுடன் விஞ்ஞானத்தைப் பற்றவேண்டும். உயிர்க்கொலைகளை நீக்க வேண்டும். உண்மைக்கு இடம் கொடுக்க வேண்டும். இறையருள் உடையவர்களின் நல்லுரைகளைக் கேட்கவேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் பேணி நடக்கவேண்டும். மாதா, பிதா கண்கண்ட தெய்வம் என எண்ணி வழிபட வேண்டும். இந்நெறியில் நிற்கும்போது குரு தோன்றுவான். அவன் இறைவனை அடைய வழிகாட்டுவான். அவன் கூறிய வழி நிற்க இறைவன் தோன்றி அருள் செய்வான்.

இறைவன் மானுடனுக்கு ஆறறிவைக் கொடுத்து, பூமிக்கு அனுப்புகின்றான். நற்காரியங்களைச் செய்ய வினைகள் அறுந்துபோய்விடும். வினைகள் நீங்கினால் இறைவனடி சேரலாம். வினைகள் நீக்கப் பிறந்த மனிதன் பஞ்சமா பாதகங்களை நீக்கி வாழ்வான். உண்மையை உரைப்பான். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசான். எல்லோரையும் மனிதன் என்று மதித்து வேண்டிய உதவிகள் செய்து புனித வாழ்வாக வாழ்வான்.

இறையருளால் பிறந்த ஔவையார் பிறந்தவுடன் ஈன்ற தாயார் குழந்தையை விட்டுச் செல்கிறேன் எனத் தயக்கமடைய குழந்தை "கல்லினுட் தேரைக்கும், கருப்பை அண்டத் துயிர்க்கும் புல்லுணவு அளித்துக் காக்கும் கடவுள் எம்மையும் கைவிடுவானா? எனப் பாடியருள தாயார் பிள்ளையை விட்டுச் சென்றார். ஞானக்குழந்தையாகப் பிறந்த ஔவையார் பிற்காலத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை என்னும் பாடல்களை அருளினார். முருகனும் ஔவையின் செருக்கை அடக்க நாவல் மரத்தின்கீழ் களை ஆற நின்ற ஔவையாரிடம் சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? எனக் கேள்வி கேட்டார். நாவல் பழங்களையும் மரத்திலிருந்து கீழே விழ வைப்பார். அப்பொழுது ஔவையார் கீழே விழுந்த பழத்தை எடுத்து மண் ஒட்டிய பழத்தை ஊதி மண்போக்கி உண்டார். அப்பொழுது மரத்தில் பையனாக நின்ற முருகன் பழம் நல்லாச் சுடுகிறதோ, ஊதிச் சாப்பிடுங்கோ என்று சொன்னார். இதைக்கேட்ட ஔவையார் பையனாக நிற்பவன் முருகனென உணர்ந்து தனது செருக்கை அடக்க முருகன்தான் வந்தான் என உணர்ந்து கைகூப்பி வழிபட்டார். செருக்கு அடைதல் கூடாதென உணர்ந்தார். மானுடப்பிறவி மிகவும் அரிது என்பதை உலகுக்கு அறியவைத்த பெருமை ஔவையாரைச் சார்ந்ததாகும். மானுடப்பிறவி எடுத்த எல்லோரும் நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

***நீண்ட நேரம் ஓடி வந்தால் அதிக தூரம் தாண்டமுடியாது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 13

(தொடர்ச்சி...

## பிரபஞ்சமும் மனிதர் நிலையும்

*-திரு பூ. சோதிநாதன் அவர்கள்-*

### 16) யோகப் பயிற்சி

ஆன்மீக சாதகன் ஒருவன் தனது வாழ்நாள் முழுவதும் யோகப் பயிற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். மேலான பூரணத்துவத்தை அடைவதற்காக அவன் அதனை மேற்கொள்ள வேண்டும். அவனது எண்ணம் உணர்வு, சங்கல்பம் என்ற எல்லாவற்றினதும் திரண்ட விளைவாக அது அமையும். அந்தப் பிரபஞ்ச எண்ணத்தை இறுதி இலக்காக அவன் தனது இதயத்தில் கொண்டிருக்க வேண்டும். எமது வாழ்வில் அவ்வாறான எண்ணத்தையும், உணர்வையும் வைத்திருப்பதற்குப் பின்னால் நாம் ஒரு சிறிய தத்துவத்தை கைக்கொள்ள வேண்டும். மொத்தப் படைப்பு முறையோடும் அந்த எண்ணம் முதலானவை தொடர்புகொள்ள வேண்டி இருப்பதனால் அவை எவ்வாறு ஒரு பிரபஞ்ச அர்த்தம் உள்ளனவாய் இருக்கின்றன என்று அறிந்து எமது எதிர்காலத்தை நாம் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். நாம் இறந்தபின் எமக்கு என்ன நிகழ்கிறது? இதுவரை கூறியவற்றில் இருந்து அவ்வினாவுக்குப் பெருமளவு விடை கிடைத்திருக்கும். எதை எல்லாம் விரும்புகின்றோமோ அவை எல்லாவற்றையும் பெறுவோம். நாம் எங்குபோக விரும்பினாலும் அங்கு அழைத்துச் செல்லப்படுவோம். இவ்வுலகில் நாம் எதைச் செய்தோமோ அதற்கான பலன் தரப்படும். அந்த விதி மிகக் கடுமையானதாக இருந்தாலும் எமக்கு ஆறுதல் அளிக்கிறது. அந்த விதி நீதியைப் போன்று பக்கம் சாராதது. பிரபஞ்சம் இயங்கும் முறையே அவ்விதிப்படி உள்ளது. அந்த விதிக்கு நண்பர்கள், எதிரிகள் என்று எவரும் இல்லை. உண்மையைத் தேடும் ஒரு சாதகனுக்கு அவ்வெண்ணம் விரிவடையக் கூடியதாக வருகின்றது. அவன் கடவுளை உண்மையிலேயே விரும்புகின்றான். அவன் புலன் இன்பங் களையும், சடப்பொருள்கள் சேகரிப்பதையும் விடுத்து ஆன்மீக வாழ்வை மேற்கொள்ளு கின்றான்.

### 17) தெய்வீகச் செயல்

இந்த வாழ்க்கையில் நாம் செய்யும் கர்மத்தைக் கடவுளின் சங்கல்பத்தோடு ஒத்துப்போகக்கூடியவாறு அமைத்துக்கொள்ள வேண்டும். இக் கருத்து முன்னரும் கூறப்பட்ட ஒரு விடயமே. எமது செயல்களை ஒரு சிறிய அளவு பொருள் பலனைப் பெறுவதற்கோ

*மனிதன் தோல்வியின் மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது மறைவான ஒரு நோக்கத்தை அடைவதற்கோ செய்வதாக நாம் கருதுவோமாயின் அச்செயலின் ஆற்றல் தனது கர்மபலனைத் தரக் காத்திருக்கும். ஒரு பிரபஞ்ச நோக்கத்தில் எல்லாச் செயலும் தெய்வீகச் செயலே என்ற உண்மையை எமக்குத் தெளியவைக்காது விடின் கீதையின் அத் தத்துவம் எமக்கு எதற்காகத் தேவைப்படும்? இந்த உலகில் நடைபெறும் எல்லாச் செயல்களும் பிரபஞ்சத்தன்மை உள்ளன என்ற கருத்தை நாம் ஆழமாகக் கொள்வோமாயின், அந்தப் பிரபஞ்ச சக்தியின் கரங்களில் நாம் கருவிகளாக அமைவோம்.

## 18) பகுத்து உணராமை

அவ்வாறு நாம் பிரபஞ்ச சக்தியின் கரங்களில் கருவிகளாக அமைந்தபின் எந்தச் செயலுக்கும் நாம் காரணகர்த்தாக்கள் அல்லர் என்பதையும், அச் செயலுக்கு நாம் வெறும் கருவிகள் மட்டுமே என்பதையும் உணர்வோம். கடவுளே எல்லாச் செயலுக்கும் காரணகர்த்தா என்ற எண்ணத்தையும், உணர்வையும் தவிர்க்கமுடியாதபடி அப்போது நாம் கொள்ளுவோம். கர்ம யோகத்துக்கு இணங்க அமையும் ஒருவரது வாழ்க்கை தனது வாழ்நாள் முழுவதிலும் கடவுள் எண்ணத்தைக் கொண்டிருப்பதை ஒருபோதும் விலக்காது. ஒரு கணமேனும் நாம் தெய்வத்தின் இருப்பை மறப்போமாயின் அச்செயல் எமது சொந்தச் செயல் ஆகிவிடும். அச் செயல் எங்களைத் தளைப்படுத்தும். அத்துடன் அச்செயலின் விளைவுகளுக்கு நாமே பொறுப்பாளிகளும் ஆவோம். எனவே நாம் கடவுளில் இருந்து எம்மைப் பிரித்து உணராத உணர்வை நிரந்தரமாகக் கைக்கொள்ள வேண்டியவர்கள் ஆவோம்.

## 19) பாதைகள்

கடவுளின் படைப்பில் எமக்கு முன்னால் உள்ள ஒரு பலம் வாய்ந்த அமுதமொழி இந்த நிரத்தரப் பிரித்துணராத தன்மையாகும். இறந்தபின் ஆன்மாவின் நிலை, பிறப்பு, மரணம் என்ற எல்லாமே கடவுளின் படைப்பிலேயே உள்ளன. மரணத்தின் பின் ஆன்மா செல்லும் குறித்த வழிகளைப் பற்றி கீதையின் எட்டாவது அத்தியாயத்தில் மேலும் சில விளக்கங்கள் தரப்பெறுகின்றன. கீதை அவ்விளக்கத்தை மிகச் சுருக்கமாகத் தந்தாலும், உபநிஷதங்கள் மிக விரிவாக அவற்றைத் தருகின்றன. இந்த உலகில் இருந்து வெளியேறுவதற்குப் பல்வேறு வழிகள் உள்ளன. நாம் இவ்வுலகில் இருந்தும் போகவேண்டிய பாதை வாழ்நாள் பூராவிலும் கொண்டிருந்த எண்ணங்களிலேயே தங்கியிருக்கிறது. இவ்வுலகில் எமது வாழ்க்கையை நடத்திவந்த சுயநலமின்மையின் அளவைப் பொறுத்து எமது கடவுளை அடையும் வெற்றியின் அளவும் தீர்மானிக்கப்பெறும். கீதை இரண்டு முக்கியமான வழிகளைக் குறிப்பிடுகின்றது. அவை வடக்கு வழி - தெற்கு வழி என்றோ ஒளிப்பாதை - இருட்பாதை என்றே கூறப்பெறும்.

## 20) ஒளிப்பாதை

ஒளிப்பாதை ஆன்மா முன்னேற்றம் அடையும் பாதை. அதன்மூலம் ஆன்மா தனது புலக்காட்சியின் ஒரு மட்டத்தில் இருந்து இன்னொரு உயர்ந்த மட்டத்துக்கு செல்லுகின்றது.

*வாழ்வில் முன்னேற முதலில் தன்னம்பிக்கை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கட்டங்களை மறைஞான நெறியில் அல்லாமல் சாதாரண மொழியைக் கொண்டு விளக்க முடியாது. சாதாரண மனதுக்கு அதனைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் கிடையாது. கீதை விளக்க ஆசிரியர்கள் அவ்வழிகளை மிக விவரமாக விளக்க முயலுகின்றனர். ஆனால் அவை போதுமானவை அல்ல. அவற்றிலுள்ள மறை ஞானப் புதிர்கள் எவை என்பதை யாரும் அறியார். ஒளிப்பாதை அநுபவப் பரிணாமங்களில் மேலும் மேலும் விரிவாகச் செல்லும் திசையில் ஆன்மாவின் பிரக்ஞை படிப்படியாக முன்னேறுவதைக் குறிக்கும் என்று கூறலாம். அந்த அநுபவம் இறைவனோடு ஆன்மா ஐக்கியம் அடையும் வரை விரிவாகச் செல்லும். சுயநலமற்ற முறையில் கடவுளை வாழ்நாள் முழுவதும் தியானம் செய்பவர்களுக்கு மட்டும் அந்த நிலை உரியதாகும். அவர்கள் கடவுளோடு தாம் ஐக்கியமாகும் வழியில் செல்வார்களே அன்றி அவரிடம் இருந்து வேறு எதனையும் எதிர்பாராதவர் ஆவர்.

## 21) இருட்பாதை

இரண்டு பாதைகளுள் ஒன்றான இருட்பாதை மீண்டும் பிறப்புக்குத் திரும்பி வரவேண்டிய பாதை. இந்த உலகில் நாம் நல்லன எவற்றைச் செய்தாலும் அதற்கே உரிய பிரதிபலன் உண்டு. எமது நற்செயல்கள் மரணத்தின் பின் நல்ல பலன்களைத் தரக் காத்திருக்கும். தொடர்ந்து நாம் காசோலை எழுதிக்கொண்டிருந்தால் எமது வங்கியிலுள்ள மீதி ஒருநாள் முற்றும் தீர்ந்துவிடும். அதுபோல நற்செயல்களும் தமது அநுபவத்தின்மூலம் ஒருநாள் முடிந்துவிடும். எமது எதிர்கால வாழ்வுகளின்போது அநுபவத்தின்மூலம் எமது நற்செயல்கள் நிறைவுபெறும். அப்போது நாம் ஆரம்பித்த நிலைக்கே மீண்டும் வருவோம். ஏனெனில் செயல்கள் எவையும் சுயநோக்குடன் செய்யப்படவேண்டியதில்லை. நாம் தர்மச் செயல்களைச் செய்யும்போதுகூட, எமது முயற்சியின் தனி உரிமைபோல எண்ணிச் செய்யக்கூடாது. "வலது கை வழங்குவதை இடது கைக்குத் தெரியாமல் செய்க" என்ற கூற்றில் இக் கருத்து இருப்பதை நாம் காணலாம். அக் கூற்றுக்குப் பின்னால் ஒரு தத்துவார்த்தக் கருத்து உண்டு. எமது நல்ல செயல்கள்கூட "எமது" செயல்களாக இருக்கக்கூடாது என்று கருதப்பெறுகிறது. எந்தச் செயலும் எங்களுடைய செயல் அன்று என்பதால் அந்த நற்செயலும் "எமது" செயல் அன்று. "நான் ஒரு நற்செயலைச் செய்துள்ளேன்", "நான் கருணைகாட்டி உள்ளேன்" என்று நாம் வற்புறுத்துவோம் ஆயின் சந்தேகத்துக்கு இடமின்றி அச்செயல்களின் பலனை நாம் பெறுவோம். அச்செயலின் ஆற்றல் தீர்ந்து போனபின் நாம் மீண்டும் புதிய பிறவியை எடுத்து எமது பழைய செயலையே மீண்டும் செய்வோம். அவ்வாறு இல்லாமல் இந்த உலகில் கடவுளின் சங்கல்பம் செயல்படுவதற்கு நாம் ஒரு கருவி என்ற எண்ணத்தோடு எமது செயல்களைச் செய்யவேண்டுமாயின் நன்மையோ தீமையோ எமது ஆளுமையில் ஒட்டிக்கொள்ளாது. செயலின் பண்பை நாம் குறிப்பிட உபயோகிக்கும் வார்த்தைகளே நல்லதும் தீயதும். செயல்கள் எங்களுடையன அல்ல என்னும்போது அவற்றின் பயனும் எங்களுடையது அன்று. அதைச் செய்யும் இறைவனுக்கே

*தோல்வி துரத்துகிறது என்றால் வெற்றியை நெருங்குகிறாய் என்று அர்த்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது போய்ச்சேரும். நாம் இந்த வழியில் உருவாக்கப்பெறவில்லை ஆதலால் இவை எல்லாவற்றையும் சிந்திப்பது எமக்குக் கடினமாக இருக்கிறது.

## 22) செய்பவர் நாமல்ல

சுயநலமற்ற முறையில் எம்மால் சிந்திக்க முடிவதில்லை. ஒரு கணம்கூடச் செய்பவர் நாமல்ல என்று எம்மால் கற்பனை செய்யமுடியாதுள்ளது. ஆன்மிகப் பாதையில் நாம் மிகவும் முன்னேறியவர்களாக எம்மைக் கற்பனை செய்துகொள்ள முடியாது. அப் பாதையில் நாம் மிகவும் பணிவுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஒரு நிமிடமேனும் செயலைச் செய்பவன் நான் அல்லன் என்று எவரால்தான் நம்பமுடியும்? நாம் வார்த்தைகளால் அதனைச் சொல்லாமல் போனாலும் செய்பவர்கள் நாம் என்று எமது இதயங்களில் உணர்வதில்லையா? இதுதான் மிக முக்கியமான விடயம். கடவுள் எம்மைத் தமது உடமையாக எடுத்துக்கொண்டால் கடவுளோடு ஐக்கியமாக உள்ள ஆன்மாவுக்கு வடக்கு வழியோ தெற்கு வழியோ தேவைப்படாது. அவ்வழிகள் உடம்பிலுள்ள பிரக்ஞையின் அநுபவ இயக்கங்கள் மட்டுமே. ஆனால் கடவுளோடு நாம் ஐக்கியமானால் வீடுபேறு உறுதியானதாகும். அந்நிலையில் கடவுளே நண்பனும், ஆதரவாளனும், நன்மை செய்பவனும் என எல்லாமாக ஒவ்வொரு வழியிலும் இருப்பான்.

## 23) கடவுளுக்காக வாழ்வது

கீதையின் அத்தியாயங்களில் முன்னேறிச் செல்லும்போது கடவுள் எமக்கு மிகமிக அண்மையாக வருகின்றார். கீதையின் ஆரம்ப அத்தியாயங்களில் கடவுளைப்பற்றி நடைமுறையில் எதுவும் குறிப்பிடப்பெறவில்லை. அங்கு அழுத்திக் கூறப்பெறுவது சுய ஒழுக்கம், சுய இணைப்பு முயற்சி என்பனவே. அதன் பின் பிரபஞ்ச இயலும், எல்லா வற்றுக்கும் பின்னால் செயல்பட்டுக்கொண்டிருக்கும் படைப்பு ஆற்றல்களும் எமக்கு அறிமுகம் செய்துவைக்கப்பெறுகின்றன. அதன் பின்னர் உடம்பைவிட்ட பின்பு ஒருவருக்கு என்ன நிகழ்கிறது என்ற வினா எழுப்பப்பெறுகிறது. அத்துடன் கடவுளோடு எமக்குள்ள தொடர்பு விளக்கப்பெறுகிறது. கீதையின் எட்டாவது அத்தியாயம், அதற்கு முந்திய அத்தியாயங் களுக்கும் பிந்திய அத்தியாயங்களுக்கும் இடையே நடுவில் இருக்கிறது. ஆரம்பக் கட்டங்களிலும், எதிர்காலத்திலும் உள்ள ஒரு சுவையும் கூட அதில் எமக்குத் தரப் பெறுகிறது. ஒன்பதாவது அத்தியாயத்தில் இருந்து சமயப் பிரக்ஞை விரிந்து செல்கிறது. அதன்மூலம் வாழ்க்கையை வாழ்வது சமய வாழ்வாக இருக்கவேண்டும் என்பது கூறப் பெறுகிறது. அத்துடன் இவ்வுலகில் இருப்பதே கடவுளுக்காக வாழ்வது என்ற கருத்து தரப்பெறுகிறது. (தொடரும்...

---

*மனிதர்களில் பெரும்பாலோர் தங்களது குறைகளை மறந்து விடுகின்றனர். ஆனால் மற்றவர்களின் குறைகளைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். நாம் நம் குற்றங்களை ஆராய்ச்சி செய்வதன்மூலமே இக் குறையைப் போக்க முடியும். மற்றவர்களின் குறைகளைப் பெரிதுபடுத்துவது மிகப்பெரிய குற்றமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கண்ட பரம்பொருள்

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

இறைவன் இயற்கையைப் படைத்தான். மக்கள் இன்புற்று மகிழ்வதற்காக இயற்கையின் இறைத்தன்மை யாவரும் கண்டு களிக்குமாறு உள்ளது. தமிழர் இவ்வரிய இயற்கைக் காட்சியைக் கடவுள் வடிவத்தில் ஏத்தி வழிபடுகிறார்கள்.

உலகிற்கு உறுதுணையாக இருக்கும் "பகலவன்" உதிப்பதும், மறைவதுமான இயற்கைக் காட்சி மனதிற்கு இன்பம் தரும் காட்சியாகும். சூரியன் வரவினால் தாவரங்கள் ஒளிச்சேர்க்கை செய்து உலகு முழுவதற்கும் அமுது படைக்கும் அளப்பரிய இயற்கைத் தொண்டு காணப்படுகின்றது. சூரியனுக்குப் பல நாமங்கள் இருப்பினும் பகலவன் எனும் நாமம் சிறப்பானது. ஒவ்வொருவரும் பகலை வரவேற்பது போன்று இரவை வரவேற்பதில்லை. இரவைக் கண்டதும் அனைத்து உயிர்களும் மறைவிடம் தேடி ஓடுகின்றன. தம் இயக்கத்தை முடக்க எத்தனிக்கின்றன. பகலே இல்லாத நாளை எண்ணிப் பாருங்கள். பகலின் அருமை வெளிப்படும்.

சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் காணப்படுகின்றன. "நான் பெற்ற இன்பத்தை நீயும் பெற வேண்டும்" எனும் உயர் நோக்கில் உருவாக்கப்பட்டவை ஆற்றுப்படை நூல்களாகும். பயன் பெற்றவரோடு மற்றையவரும் பயன்பெறுவதற்கு வழி காட்டல் என்பதுதான் ஆற்றுப்படை இலக்கணமாகும். பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை மூன்றின் பொருளுரை பெரிய யாழ் வாசிப்பவரை, சிறிய யாழ் வாசிப்பவரை ஆற்றுப்படுத்தியவையாகும். ஆனால் இதற்கு மாறாகத் திருமுருகாற்றுப்படை என்பது முருகனிடத்து ஆற்றுப்படுத்தல் எனப் பொருள்படும்.

திருமுருகாற்றுப்படைக் கவிஞர் நக்கீரனார் மனத்தில் சூரியோதயம் எனும் இயற்கைக் காட்சி அழகிய வடிவம் பெற்று "முருகு" எனும் நாமம் பெற்றிப்பதைக் காணலாம்.

"உலக முவப்ப வலனேர்பு திரி தரு
பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டா அங்கு"

-திருமுருகாற்றுப்படை-

உலக மக்கள் உய்யும் பொருட்டுப் பலராலும் புகழப்படும் சூரியனைக் காண்பது போன்று, மக்களின் துயர் துடைக்கும் முருகப்பெருமானின் வடிவம் அமைகிறது. சூரியோதயக் காட்சி கடற்கரையில் நின்று பார்ப்போமாயின் நீலக் கடலிலிருந்து சூரியன் மெல்ல மெல்ல வெளித்தோன்றுவதுபோலக் காணப்படும். அக் கதிரவனின் உடல் செம்மையும் மஞ்சளும் கலந்த பொன்னிறமாக மின்னுகையில் கீழே தோன்றும் கடலானது பச்சை, மஞ்சள், ஊதா, கறுப்பு முதலிய பல நிறங்கள் கலந்து நீல நிறமாகக் காணப்படும். மேலே வானமும் சூழ்ந்திருக்கும் காட்சியானது அழகிய நீலத் தோகை மயில்மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருக்கும் அழகுமிகு இளைஞனின் தோற்றத்தோடு ஒத்திருத்தலை அகக் கண்ணிற் கண்ட நக்கீரர் அவ்விளைஞனை முருகனாக நமக்குக் காட்டியுள்ளார். சேவல் கூவுதல் சூரிய உதயத்திற்குக் கட்டியம் கூறும் நிகழ்வாகும். அதனையும் கருதி முருகனுக்குச் சேவற்கொடியையும் சேர்த்து அமைத்த சிறப்பு வியத்தற்குரியதாகும். உலகைப் படைத்த பரம்பொருள் அவ்வுலகத்தினின்றும் வேறாக நிற்காமல், உலகத்தோடு கலந்து நிற்பான் என்பதே சைவசித்தாந்த முடிபாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்க் கடவுளாம் முருகனுக்கு வடிவம் கண்டனர்.

காலையில் உதித்து மாலையில் மறைவதுபோல உள்ள ஞாயிற்று உதயக் காட்சியை "சிவன் வடிவிலும்" தமிழர் கண்டனர். உதயத்திலும் மறைவிலும் சூரியன் சிவப்பாக இருப்பதனால் இறைவன் சிவந்த நிறமுடைய சிவன் எனப்பட்டான் போலும். சிவனுடைய வடிவத்தில் வானிற் காணப்படும் முகிற் கூட்டங்களே சடைக் கற்றைகளாகும். முகிற் கூட்டத்திடையே காணப்படும் சந்திரன் வெண் பிறையாக வைக்கப்பட்டது. முகிற் கூட்டத்தில் நீராவி உண்டு என்பதை அறிவியல் விளக்குவதற்கு முன்னரே தமிழர் மெய்ஞ்ஞானத்தினால் அதனைக் கண்டுகொண்டு முகிற்கூட்டம் நீராவியைக் கொண்டது என்பதைக் காட்டுவதற்குச் சிவன் சடையிலே கங்கையை வைத்தார்கள். இயற்கைக்குக் கடவுள் வடிவம் தந்த தமிழரின் ஆற்றல் வியப்பளிக்கின்றதல்லவா.

தமிழர் கண்ட இறைவடிவங்கள் சைவசித்தாந்தம் கூறும் தெய்வக் கோட்பாட்டுக்கு முரண்படாத வகையில் அமைந்துள்ளன. புராணங்களிற் காணப்படும் இறைவனின் தோற்றம் பற்றிய கதைகள் இறை கோட்பாட்டிற்கு முற்றிலும் முரண்பட்டவையாகும். புராணம் ஒன்றில் விநாயக தோற்றம்பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது.

உமாதேவியார் நீராடுவதற்குச் செல்கிறார். அச்சமயம் சிவபெருமான் வந்துவிடக் கூடாது என்பதற்காகக் காவலாளி ஒருவரை நிறுத்த நினைத்துத் தன் மேனியிற் பூசப்பெற்ற மஞ்சளை உருட்டி வைக்கிறார். அவ்வுருண்டை பிள்ளையார் வடிவம் பெறுகிறது என்பது புராண ஐதீகக் கதை. இவ்வகை கதையானது இறை இலக்கணத்தையே கேள்விக்குறி யாக்குகின்றது. இத்தகைய அறிவுக்குப் புறம்பான கற்பனைக் கதைகள் வட நாட்டவர்களால் புகுத்தப்பட்டவையாகும். புராணங்களில் உள்ள இத்தகைய கற்பனைகளை நீக்கிச் சைவசித்தாந்தம் கூறும் இறை தத்துவத்தின் அடிப்படையில் இறை வடிவங்கள் கூறப்பட்டன என்பதை மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு உணர்த்த வேண்டும்.

"ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே" என்பது நாவுக்கரசர் வாக்கு. ஓசை என்பது உள்ளீடு அற்ற சப்தத்தையும் ஒலி என்பது சொல் வடிவத்தையும் குறிப்பதாகும். இத்தகைய ஆற்றல்மிகு ஒலிவடிவம் வட்டமும், வரியும் கூடியதாகும். வட்டமாகிய முகமும் வரியாகிய தும்பிக்கையையுமுடைய யானையின் வடிவம் ஆனைமுகனாக்கப்பட்டது. பிள்ளையார் சுழி வட்டமும் வரியும்தான். சொல்லின் ஒலி வடிவம் என்பது ஆற்றலின் சங்கமமாகும். நம் சமயத்திற் கூறப்படும் மந்திரங்கள் ஆற்றல் மிக்கவையாகும். சொற்களில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் குறிப்பிட்ட அதிர்வு உண்டு. ஆலயங்களிற் கூட்டுப்பிரார்த்தனை

***துன்பமும் ஏழ்மையும் போதிப்பதுபோல் வேறு ஒன்றும் போதிக்க முடியாது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்தும்பொழுது பாடலின் சொற்கள் சுற்றுப்புறத்தில் ஒரு அதிர்வை ஏற்படுத்துகின்றன. இவ் அதிர்வுகள் சக்திமிக்கவையாகும். இதனால் மனித செயற்பாடுகள் சீரடைகின்றன எனத் தற்கால விஞ்ஞானமும் உறுதிப்படுத்தியுள்ளது. தமிழர் அதிர்வின் வடிவை இறை வனாக்கி அறிவியலுக்கு அடிப்படை அமைத்தார்கள்.

இறைவன் தவத்திற் சிறந்த முனிவர்களாலும் அறியப்படாதவனாய், பிறப்பு இறப்பு அற்றவனாக இருப்பவன். இவ்வாறு எல்லாம் கடந்த இறைவன் தானாகவே இறங்கி வந்து தன் அருளுருவைக் காட்டினால் அன்றி இறை வடிவை நாம் காணமுடியாது. அருளாளர்கள் சிலருக்கு இறைவன் பேரொளியாகக் காட்சி தந்து மறைந்தான் என்பதை அறிகிறோம். உண்மை இவ்வாறாக இருக்கப் புராண உரைகள் அனைத்தையும் ஏற்றுப் பிரசாரம் **செய்வதைத் தவிர்த்து இயற்கையோடு இணைந்த பேரொளி வடிவம் இறைவடிவம் என்பதை மனத்திற் கொள்வோமாக.**

---

## பொறுப்பைத் தட்டிக் கழிக்காதீர்கள்

நாம் இன்று இப்படி இருப்பதற்கு நாமே பொறுப்பு. இனி எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படி நம்மை மாற்றிக்கொள்ளும் ஆற்றலும் நம்மிடம் உள்ளது. இப்போதுள்ள நிலைமைக்கு நம் முன் வினைப் பயன்களே காரணம். நம் எதிர்கால வாழ்க்கைக்கு இன்றைய நம் செயல்கள் காரணமாக அமையும் என்பது உறுதி.

நமக்கு நாமே செய்துகொள்ளும் துன்பத்தைத்தவிர வேறு துன்பம் எதுவும் நம்மை வந்து அணுகாது. அதற்கும் நம் ஆணவமே காரணம். துன்பம் ஏன் வந்ததென உங்களை நீங்களே ஆராய்ச்சி செய்து பாருங்கள். ஒரு பாதியை நீங்கள் செய்திருப்பீர்கள். மறு பாதியை புற உலகம் செய்திருக்கும். இந்த ஆராய்ச்சியிலிருந்து ஒரு நம்பிக்கை பிறக்கும். துன்பத்திற்குக் காரணமான முதல் பாதியை கட்டுப்படுத்தினால், அது நம்மை ஒருபோதும் தீண்டாது என்பதே அந்த நம்பிக்கையாகும்.

நம்பிக்கையற்றவர்கள் துன்பம் வரும்போது பிறர்மீது பழி சொல்வதிலேயே குறிப்பாக இருக்கிறார்கள். பிறர்மீது பழி சொல்லும்போது நாம் பலவீனமானவர்களாக ஆகிவிடுவோம். சொந்தக் காலில் நிற்கப் பழகுங்கள். துன்பத்திற்கான பொறுப்பு முழுவதையும் உங்கள் தோளில் சுமந்து கொள்ளுங்கள். வலிமையும் உதவியும் உங்களுக்குள் குடிகொண்டிருக்கின்றன. அதன் உதவிகொண்டு, துன்பத்தை எதிர்கொண்டு நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள உடனே முயற்சி செய்யுங்கள்.

### குருபூசை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செப் | 30 | புர | 14 | திங்கள் | அருணந்தி சிவாச்சாரியார் |
| ஒக் | 04 | புர | 18 | வெள்ளி | சங்கரபண்டிதர் |
| ஒக் | 15 | புர | 29 | செவ்வாய் | கடையிற் சுவாமி |

*எதையும் செய்யாதிருப்பதைவிட ஏதாவது ஒன்றை நாள்தோறும் செய்வது மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 87

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 தந்ததிற்கு நன்றிசொல்லல் இறைவழிபாடு
நீ தந்தால் நான் தருவேன் என வணங்கல் குறைபாடு
கேட்டதைத் தந்தால் தான் நன்றியுண்டு என்றல்ல
கேட்காமல் தந்ததிற்கே நன்றி காட்டல் சிறப்பாகும்.

02 பிறக்கின்ற போதிறைவன் குறையேதும் விடுவதில்லை
பிறந்தபின்னால் உறுப்பொன்றை மேலதிகம் தாராமையைப்போல்
வாழ்க்கையின் நியதியையும் பிறந்த அன்றே தருமிறைவன்
மாற்றமதில் கேட்டிட்டால் மீளாய்வு செய்ய மாட்டான்.

03 கோயிலை இடித்தாலும் கோபுரத்தைக் கட்டினாலும்
தந்தவற்றில் இறைவனேதும் மாற்றங்கள் செய்யமாட்டான்
நன்மைக்கும் தீமைக்கும் பலன் கிடைக்கும் காலமது
மறுபிறப்பே என்றறிந்து இப்பிறப்பில் நடந்திடுவீர்.

04 படைத்தெம்மை விடுவது இறைவனது கடனாகும்
படைத்தபின்னால் பிழைப்பது எங்களது கடனாகும்
பிழைப்பினையும் தாவென்று இறைவனை நாம் கேட்பது
மானிடத்தின் மகிமைதனை உணராத செயலாகும்.

05 தான் படைத்த படைப்பினிற்கு பணியாற்றிக் கிடப்பதற்கே
எம்மைப் படைத்தான் இறைவனென்று நாமறிந்து கொள்ளாமல்
அவன் படைப்பை நாமழித்து அவனைமட்டும் வணங்கிநின்றால்
ஏன் படைத்தேன் மனிதத்தை என்றிறைவன் எமையழிப்பான்.

06 அறிவாளி என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
அறிவிலிகள் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
புத்தகத்தில் அற்றசில புத்திக்குள் வருமந்த
பொக்கிஷத்தைக் கொண்டோரே அறிவாளி என்றறிவீர்.

*வாழ்க்கையை புரிந்துகொள்வதைவிட அதை வாழ்ந்து பார்ப்பதே சிறந்த முயற்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பக்திமான்கள் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
பக்தியிலார் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
கோயிலுக்குள் அற்ற சில கோடிகளில் இருக்குமதை
உணர்ந்து சேவை செய்வோரே பக்திமான்கள் என்றறிவீர்.

08 செல்வந்தர் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
வறியவர்கள் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
சொத்துக்கள் அற்றசில சித்தத்துள் இருக்குமந்த
சிறப்பினைப் பெற்றோரே செல்வந்தர் என்றறிவீர்.

09 வீரர்கள் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
கோழைகள் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
போருக்குள் சுற்றசில பெருமைக்குள் இருக்குமதை
பாருக்குள் கொண்டவரே வீரர்கள் என்றறிவீர்.

10 அழகுடையார் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
அழகிலார் என்று நாங்கள் சொல்பவரும் அதுவல்ல
முகத்தினில் அற்றசில அகத்தினில் இருக்குமந்த
மகத்துவம் உடையோரே அழகுடையார் என்றறிவீர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பிறையாளன் தவமைந்தன் கலாபூஷணம் தம்பு துரைராஜா பிரபு

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

நூறு வயதிலே ஒரு இளைஞன் ஆயிரம் பிறைகண்ட அற்புதனாக, இலங்கையில் வென்றிருக்கின்றார் என்றால் அது எல்லோருக்குமே பெருமையே ஆகும். அந்தப் பெறுமதிக்கு உரியவர் கலாபூஷணம், சைவப்பெரியார், தம்பு துரைராசா அவர்கள் ஆவார்.



சிவத்தமிழ்ப் பண்புகள் - சொட்டச் சொட்ட, ஜீவகாருண்ய இரக்க சுபாவம் கொண்டவராய் - ஒளிர மிளிர, யோகம் ஞானம் நாளும் பொழுதும் வெல்பவராய் அதிலே திளைப்பவராய், தக்கதாய் மனைவி மக்கள் பேரர்கள் உற்றார் உறவினர் அயலவர் ஆன்மீகவாதிகள் எல்லோருடனும் அன்புடனும் ஆதரவுடனும் அன்னியோன்னியமாக வசீகரிப்பவராக அன்றும் இன்றும் என்றுமே விளங்குபவராய் நூற்றாண்டு காணும்

*அளவில்லாத வேதனைகளை தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தகையே ஸ்ரீமான் தம்பு துரைராசா ஆவார். அவரது அன்புத் துணைவியார் ஸ்ரீமதி இரத்தினேஸ்வரி அம்மையாரின் தவமே இவரை வரமாக்கியது. கந்தபுராண கலாசார விளைச்சலை யாவரும் அனுபவித்திட வேண்டுமென அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற தவமுதல்வராகத் திகழ்கின்றார்.



மேலும் திருவாசகம் என்னும் தேனைக் கரைத்துக் குடித்து, அதனைப் பன்னீராக்கித் தெளித்தவர். இதன்பிரகாரம் மன்னார் திருக்கேதீஸ்வரம் பாலாவியின் கரையிலே, திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மண்டபத்தினை நிறுவி அதன்மூலம்



*அறிவைவிட தைரியத்தினால் பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான சிவப்பணிகளை ஆற்றிவருகின்றார். இம் மண்டபம் முன்பாக ஆவினங்களைப் போற்றும் வகையில், விசேட தண்ணீர்த் தொட்டி ஒன்றினைக் கட்டி பசுக்களின் தண்ணீர்த் தாகத்தினைப் போக்க வழி சமைத்துள்ளார்.

மேலும் இவரது பெரும் முயற்சியினால் பூந்தோட்டம் அமைத்தல், மணிவாசக சுவாமிகளது குருபூஜை அன்னதானம், மகோற்சவகால அன்னதானம், தங்குமிட வசதிகள், பூரணைகால திருவாசக முற்றோதல் அன்னதானம், இலவச மருத்துவ முகாம், மூக்குக் கண்ணாடி வழங்குதல், முதியோர்களுக்கான நிவாரண உதவிகள், உலர் உணவுப் பொதிகள் வழங்குதல், மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள், கற்றல் உபகரணங்கள், நடக்கமுடியாதவர்களுக்கான சக்கர நாற்காலி வண்டிகள், முதியோர்களுக்கான இல்லம், கருத்தரங்குகள், கலைநிகழ்வுகள் மற்றும் பரோபகார சமயோசித உதவிகள், அனர்த்த உதவிகள், பஞ்சலோகத்தினால் உருவாக்கப்பட்ட மாணிக்கவாசக சிலை ஸ்தாபித்தமை, சித்தர்கள் பெரியோர்கள், உபகாரிகள் என சிவதொண்டர்களின் உயிரோட்டமான படங்களை ஆவணப்படுத்திக் காட்சிப்படுத்தியமை, போட்டிகளும் பரிசளிப்பும் ஆகிய இத்தனை தொண்டு களையும் நிறைவேற்றி மென்மேலும் தொண்டாற்றுவதற்கு நூற்றியோராவது வயதினை யாவரும் வரவேற்று சகல சௌபாக்கியங்களிலும் அவரும், அவருடைய குடும்பமும் திளைக்க வாழ்த்துவோமாக.

---

## ஆன்மீக ரகசியங்கள்

பெருமாள் கோவிலுக்கு துளசி கொண்டு செல்வபவர்கள் அதை அலசி எடுத்துச் செல்லக்கூடாது. துளசி என்பது புனிதமான ஒரு பொருளாகக் கருதப்படுகிறது. எனவே அதன் தெய்வீகத் தன்மை மாறாமல் இருக்க தண்ணீரில் அலசாமல் அப்படியே பறித்து எடுத்துச் செல்ல வேண்டும்.

தன்னைத் தானே சுற்றிக்கொண்டு கோவிலில் நின்று வழிபடக்கூடாது. கடவுளைச் சுற்றி வலம்வர வேண்டுமே தவிர, ஒரு மனிதன் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு வலம் வரும் பரிகாரத்தை ஒருபோதும் தவறாக செய்யக்கூடாது. இதை யாராவது செய்யச் சொன்னாலும் செய்யாதீர்கள்.

சிவன் கோவிலுக்கு செல்லும் பொழுது கன்னத்தில் சிவ சிவ என்று அடித்துக் கொள்வதைப் பார்த்திருப்போம். இப்படிக் கன்னத்தில் போட்டுக்கொள்வதை விஸ்ணு ஆலயங்களில் செய்யக்கூடாது. ஹரியும் சிவனும் ஒன்று என்றாலும் வணங்கும் முறை வெவ்வேறாக இருக்கிறது.

சிவன் கோவிலுக்கு செல்பவர்கள் அங்கிருந்து எந்தப் பொருளையும் எடுத்துக் கொண்டு வரக்கூடாது என்று கூறுவார்கள். இது தவறான நம்பிக்கையாகும். சிவன் சொத்து குலநாசம் என்பது சிவனுடைய ஆலய சொத்தைக் குறிப்பது ஆகும்.

அங்கு கொடுக்கப்படும் விபூதி போன்ற பிரசாதப் பொருட்களை தாராளமாக எடுத்துவந்து வீட்டில் வைத்துக்கொள்ளலாம். அது மட்டும் அல்லாமல் சிவன் கோயிலுக்கு சென்று வருபவர் கண்டிப்பாக காணிக்கை செலுத்திவிட்டுத்தான் வரவேண்டும்.

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் அருள்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

வாழ்க்கையில் அவசரம் என்பது கூடாது. அவசரமாகத் தவிர்க்கப்பட வேண்டியது அவசரம். இது உடலுக்குக் கூடாது. உள்ளத்துக்கும் ஆகாது. அவசரத்தால் பதற்றம் ஏற்படும். பதற்றம் தொடருமானால் இரத்த அழுத்தம் ஏற்படும். இது வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்துவிடும். இவை எல்லாம் உடலைப் பொறுத்த அளவில், அளவோடு இருக்கவேண்டியன.

இவை மட்டுமல்ல, நாம் எமது வாழ்க்கையில் அவசரப்பட்டு எடுக்கும் முடிவுகள், ஒருவரது வார்த்தைகளைக் கேட்கையில் அவர்களைப் புரிந்துகொள்ளாமல் நிதானம் தவறி எடுக்கும் முடிவுகள், இவைகளும் பாரதூரமான முடிவுகளைத் தரவல்லன.

இதற்கும் உங்களுக்கு நான் ஒரு கதை வைத்திருக்கின்றேன். அவசரப்படாமல் கேளுங்கள்.

கவி காளிதாசன் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். காளிதேவியின் அருளால் காளிதாசன் மகாகவி ஆகினான். "சாகுந்தலம்" போன்ற பல காவியங்களைப் படைத்து புகழின் உச்சிக்கே சென்றவன் காளிதாசன். இதனால் போஜராஜனின் பாராட்டுக்கும் பெருமதிப்புக்கும் ஆளாகி இருந்தான் அவன். போஜராஜனின் சபையில் தண்டி என்னும் புலவரும் இருந்து வந்தார்.

சபையிலே சிலர் தண்டிக்குப் பெருமதிப்பு அளித்து வந்தார்கள். இதன் காரணமாக, தண்டியா? காளிதாசனா? இருவரில் யார் சிறந்தவர்கள்? என்ற கேள்வி வேறு எழுப்பப்பட்டது.

இதற்கிடையில் தண்டியும் காளிதாசனும் சம காலத்தவர் அல்ல என்றும் சர்ச்சை ஒன்று உள்ளதால் இக் கதை செவிவழிச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் இங்கே கூறியாக வேண்டும்.

காளிதாசனா தண்டியா பெருங்கவிஞன்? என்ற விளாவுக்கு காளி தேவியே விடை பகிரவேண்டும் என்ற முடிவுக்கு சபை வந்தது.

எல்லோரும் காளிதேவியின் சந்நிதியில் கூடினார்கள். "தண்டியா? காளிதாசனா" எவர் பெருங் கவிஞர்? எனத் தேவியே தெரிவித்தருள வேண்டும் என அன்னையை வேண்டி நின்றனர்.

என் அருள் பெற்ற காளிதாசனே பெருங்கவிஞன் எனக் காளிதேவி கூறியருளுவாள் எனப் பெரும்பாலோர் எதிர்பார்த்தனர். ஆனால் காளிதேவியோ "தண்டியே கவி" எனப் பதிலளிக்க ஆரம்பித்தாள். தேவியின் வார்த்தைகளைக்கேட்ட காளிதாசன் மனம் நொந்தான், கோபமும் கொண்டான். உன்னை நம்பி மோசம் போனேனே, என்னைக் கைவிட்டு விட்டாயே, எனப் புலம்பினான். அத்தோடு நின்றுவிடாமல் தேவியை வன் சொற்களால் வசையும் பாடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிதாசனின் வசை மொழிகளைக் கேட்ட காளிதேவி கூறினாள், "மகனே! நீ எனது பதில் முழுவதையும் கேட்காமல் அவசரப்பட்டுவிட்டாய்" என்றாள். அதற்கு காளிதாசன் "என்ன பதில் நீ சொல்ல இருந்தாய். அதுதான் தண்டியே கவிஞன் என அவனைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டாடி விட்டாயே!" என்று மீண்டும் சத்தமிட்டான்.

அன்னை அமைதியாகப் பதிலளித்தாள். "ஆம் மகனே! மீண்டும் சொல்வேன் தண்டியே கவி அதில் மாற்றமில்லை. ஆனால் நீ யார் தெரியுமா? நானே நீ என் அருள்பெற்ற நீ என் வடிவமாக மாறிவிட்டாய். "நீயே யான் எனப் பதில்" முடித்து உன்னை எல்லோர் முன்னும் உயர்த்த இருந்தேன். நீ அவசரப்பட்டுவிட்டாய். அத்தோடு உன் அவசரத்தால் என்னையும் திட்டி வசை பாடிவிட்டாய். மகா காவியங்களைப் பாடும் நீ வசை பாடலாமா? என் அருள் பெற்ற கவிஞனாக இருந்தாலும் உன் தவறுக்கு தண்டனை உண்டு. எனினும் என் பக்தனான உன்னை தக்க தருணத்தில் தடுத்தாட்கொள்வேன். நீ அடுத்த பிறப்பில் ஊமையாகப் பிறப்பாய். அதுவே உனக்குத் தண்டனை" தேவி திருவாய் மலர்ந்தருளி மறைந்தாள்.

காளிதாசன் மறுபிறவியில் தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் ஊமையாகப் பிறந்தான். முற்பிறவித் தொடர்பு அவனை காஞ்சி காமாட்சித் தாயோடு ஈடுபாடு கொள்ள வைத்தது. கோயிலில் தங்கி கோயிற் பிரசாதத்தை உண்டு வளர்ந்தான்.

ஒருநாள் அன்னையின் அருள் பெற்றான். அழகிய இளம் பெண் ஒருத்தி தன் வாயில் குதப்பிய தாம்பூலத்தை அவன் வாயில் இட்டு அருள் புரிந்தாள். அவளே அன்னை காமாட்சி. ஊமையாக இருந்த அவனிடமிருந்து மடை திறந்த வெள்ளம்போல் கவிதைகள் பெருக்கெடுத்தன. மூகனாக அதாவது ஊமையாக இருந்து தேவியின் அருள் பெற்றுப் பாடியதால் அவன் மூககவி எனப் பெயரும் பெற்றான்.

அன்னைமேல் அவன் பாடிய 500 பாடல்களும் மூக பஞ்ச சதி எனப் புகழ்பெற்றது. அன்னையைத் துதித்துப் பாடி யாமும் அவள் அருள் பெறுவோம்.

எனவே எதற்கும் அவசரம் வேண்டாம். எம்மில் எல்லோராலும் கவிபாட முடியாவிட்டாலும் அன்னைமேல் அடியார்கள் ஏற்கனவே பாடியிருக்கும் தோத்திரங்களை யாமும் பாடி அவள் அருள் பெறுவோமே.

**நல்லதை எமக்கருள்வாயே வேல் முருகா**

தேடி வந்துனைத் தொழுகின்றோமே முருகா
தரிசனத்தைக் காட்டி எமை ஏற்கா யோமுருகா
வாடிச் சோருதே எம்மனம் வேல் முருகா
மயில் ஏறிவந்தருள் புரியா யோமுருகா
கூடிச் சேர்ந்து வாழ்ந்திடும் குடும்பம்
குறைகள் நீக்கி எமை வாழ்விப்பாயே
நாடித் தொழுது நலம்பெற அருள்வாயே
நல்லதை எமக்கருளும் செல்வச்சந்நிதி வேலே.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*சுயமாக முடிவெடுக்கத் தெரியாதவன் பெரும்பாலும் அடிமையாகவே இருப்பான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பு தரு மனமும் கரும்பு தரு சுவையும்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

இரும்பு ஒரு கனிமம். (கனிமம்- உலோகம்) கரும்பு ஓரறிவுப் புல்இனம். கரும்புத் தோட்டம் ஒரு பயிர்ச்செய்கை. கருப்பஞ் சாற்றில் இருந்து சீனி, சருக்கரை, கற்கண்டு தயாரிக்கலாம். இரும்பு வன்மையானது. கருப்பஞ்சாறு மென்மையானது, தித்திப்பானது. இக் கரும்பை வைத்து வலிமையானவர்களையும் மென்மையானவர்களையும் படம்பிடித்துக் காட்டியுள்ளார் வள்ளுவர்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன் படுவர் கீழ்

-திருக்குறள் - கயமை- 8.

விநாயகப் பெருமானுக்கு உவப்பானது கரும்பு. இரும்பை உருக்கிப் பயன்படுத்தும் வழி துறைகளை விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது. அதனால் இவ்வுலகமே இயந்திரமய மாக்கப்பட்டுவிட்டது. மனித வலுவை யந்திர வலுவுக்குமாற்றி மனித குலம் சிறக்க விஞ்ஞானிகள் உழைக்கிறார்கள். "குரங்கு பிடித்ததெல்லாம் இரும்பு, கடித்ததெல்லாம் கரும்பு" என்பது பழமொழி. இரும்பு இருப்பு என்றும், கரும்பு கருப்பு எனவும் வலித்தல் விகாரமாய் வழங்குவதும் உண்டு.

"............................ நெட்டிருப்புப்
பாறைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண் கருப்பு வில்லோன்
மலரோ விருப்பு" என்ற திருவாக்குகள் சிறந்த ஆதாரமாகும்.

மன்மதன் கருப்பம் வில்லைத் தாங்கி, பஞ்சபாணங்களை எய்கிறான். திருவாசகம் எனும் ஒப்பிலா நூலைத் தந்த வாதபூரீசர் பல பாடல்களில் தன் மனசை இரும்பு, இரும்பிலும் வலிது என்கின்றார்.

இரும்பு நெஞ்சக் கள்வனேனை ஆண்டு
கொண்ட நின்னதாட்

-திருச்சதகம் 80.

இரும்பு தரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்னென்புருக்கி

-திரு ஏசறவு 1.

இரும்பிலும் கடிது என் நெஞ்சு எனப்பேசும் மணிவாசகரது உள்ளம் அனலிடைப்பட்ட மெழுகாயும் மாற்றம் கண்டிருக்கிறது. இரும்புகூட வெட்கும்படி தன் கெட்டியான மனசைத் திணியார் மூங்கில், வன்பராய்முருடு, கல்நார், கல் என்றெல்லாம் வர்ணிக்கிறார் வாசகத்தில். இவ் வலிய மனமும் இளகிப் பாகாய் ஓடிய பாங்கை, கட்டங்களைத் திருவாசகத்தைப் படிக்கும்போது காணாமலும் இல்லை. அவர்கள் பெற்ற பேரனுபவம் நமக்கு எந்நாட் கிட்டுமோ என எம் மனம் வெதும்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாதவூரடிகட்குப் பின்னாலே கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமான சுவாமிகளும் தன் மனதைக் கல்லாக இரும்பாக விமர்சிக்கிறார். பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்ற தொடர் தாய் சேய் மனோ தர்மம் என்ன என்பதை விளக்குகிறது.

கல்லேனும் ஐயஒரு காலத்தில் உருகும்என்
கல்நெஞ்சம் உருகஇலையே
கருணைக்கு இணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க ஒரு கடவுளோ

-தாயுமானவர் பாடல், சுகவாரி 4.

அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவேஎன் அறிவில் ஊறும்
ஆனந்த வெள்ளமே என்று என்று பாடினேன்
ஆடினேன், நாடி நாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த்து இருகை கூப்பி
விண்மாரி என என் இரு கண்மாரி பெய்யவே
வேசற்று அயர்ந்தே வியான்
இரும்புநேர் நெஞ்சக் கள்வன் ஆனாலும் உனை
இடைவிட்டு நின்றது உண்டோ?

-மேலது 7.

மனிதநேயம் பறிபோன நிலையில் இன்று வாழும் மனிதம் கல்லாய்ப் போனது. இதைக் ஹாஸ்யமாக - கல்லாய்ப்போன மனிதனைக் கண்டு - கடவுளும் கல்லாய்ப் போனது எனக் கவியரசர் கண்ணதாசன் பாடியுள்ளார். கடந்த சில தசாப்தங்கட்கு முன் வெளியான நடராஜப் பத்தில் இறைவனை உலுப்பிப் பார்த்து - அலுத்துப்போன நிலையைப் பர்ணமிக்கும் பாணியிலே எழுந்த பாடல் இது.

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இரு செவியும் மந்தமோ கேளாது அந்தமோ
இது உனக்கு அழகு தானோ?

-நடராஜப் பத்து 10.

சொல்லிச் சொல்லிப் பயன் காணாது அலுத்துப்போன மனிதமனம்- இன்னமுஞ் சொல்லவோ - எனத் துவங்கி - நின் மனம்- கல்லோ - இரும்போ பெரும் பாறையோ என இறைவனையே சாடுகிறது. சொல்லியும் காதில் ஏறவில்லை என்பதை உணர்த்த இரு செவியும் மந்தமோ, கேளாது அந்தமோ என்று கவிஞர் ஆதங்கப்படுகிறார். கேட்டால்தானே தன் கேள்வி (கடவுளின்) மனதில் எதிரொலிக்கும் என்ற பாவம் கவிஞரின் வாக்கில்

*என்ன இழந்தீர்கள் என்பது முக்கியமல்ல. என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை அறியாமலே வந்துவிட்டது. நாம் இப்பாடலைப் பாடும்போது பாடல் களை தட்டுகிறது. திருமங்கை ஆழ்வார் திரு இந்தளூர் என்னும் தலத்துக்குப் போனார். அப்போ சந்நிதி பூட்டி இருந்தது. பரமள ரங்கனைக் கண்டு ஸேவிக்க வாய்ப்பில்லாமற் போய்விட்டது. எனவே இந்தளூரீர் வாழ்ந்தே போம் நீர் என்று பாடுகிறார்.

ஆசை வழுவா தேத்து
மெமக்கிங் கிழுக்காய்த்து, அடியோர்க்குத்
தேச மறிய வுமக்கே
யாளாய்த் திரிகின் றோமுக்கு
காசி னொளியிற் திகழும்
வண்ணம் காட்டீர், எம்பெருமான்
வாசி வல்லீர் இந்த
ளூரீர்! வாழ்ந்தே போம் நீரே!

-பெரிய திருமொழி 4:9-4.

திட்டுவதுபோல் வாழ்த்தும் பாசுரம் இது. என்ன பிடிப்பு ஆழ்வாருக்கு. இந்த ஊர் இறைவனிடம்.

திருவேகம்பத்தில் எழுந்தருள் பாலிக்கும் இறைவனை - ஏகம்பர், கம்பர் ஏகாம்பர நாதர் என்றெல்லாம் புகழ்வர். சுந்தரர்க்கு ஒரு கண் கொடுத்தவர் கச்சியேகம்பரேதான். மற்றக் கண் பெற நம்பி ஆரூருக்குப் போனார். திருவாரூர் தியாகரை, மற்றக்கண் தாராவிடின் "நீர் வாழ்ந்து போதீரே" எனப் பதினொரு பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார். நாமெல்லாம் இசைக்கும் முதற் பாடல் இது.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரிர் வாழ்ந்து போதீரே.

-திருமுறை 7:95-1.

இறைவனிலே கொள்ளையான ஈடுபாடும், பக்தியும், உருமையும் நிறைந்த மதுர பக்தியால் வைராக்கியமானவர்களின்- பக்தி விசுவாசம் இப்படிப் பளிச்சிடுகிறது. பேசவும், ஏசவும், பேச்சுப்படவும் வல்லவன் இறைவன் இரக்கமற்ற மனிதம் சமுதாயத்தில் இல்லாமல் இல்லை. அவர்களுக்கும் இரங்கி அருள்பாலிப்பவன் அவர்கள் போற்றும் ஈசன். இரும்பிலும் திண்மையான, திடசித்தமும், புடம்போடப்படுவது பக்திக் கனலிலேதான். பொன் உருகிச் சுத்தத் தங்கம் ஆவதுபோல இறையநுக்கிரகத்தால் மனித மனம் தங்கமாகிறது. எமக்குத் தேவை தங்க மனசு. மனம் தூய்மையடைந்து எழில்பெறும்போது மனிதம் சிறக்கிறது. வாழ்வும் திறக்கிறது. உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்பது பாரதி வாக்கு. இரும்புமனம் கரும்பாகி இனிக்கவும் செய்கிறது.

சொற்குறுதி அப்பர் என்பர். வாக்கின் வேந்தரான பாவேந்தர்- இறைவனை அனுபவித்து அவனின் இனிமையை ஒப்பாய்வு செய்துபார்க்கிறார் தன் பாடலிலே.

*நாளை என்பது கனவைப் போன்றது. இன்றைய நிஜத்தை ரசித்திடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க் கிடைமருதனே.
-திருமுறை 5:29.1.

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையை....
-திருமுறை 6:29.1.

இனிமையின் தித்திப்பை தேன், பால், கரும்பு என்பன மூலம் காட்டுகிறார் அப்பர் சுவாமிகள். நாவின் சுவை என்றாலும் கரும்பு போன்ற இறைவன் சுவை மனத்தையும் கடந்து, உயிரின் அனுபவிப்பாயும் திகழ்கிறது. இப்பாணியில் தாயுமானாரும் சில கருத்துக்கள் தருகிறார்.

அருள் பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆர்அமிர்தே என்கண்ணே அரிய ஆன
பொருள் அனைத்தும் தரும் பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்ற ஒன்றே புனித வாழ்வே
-தாயுமானர் பாடல்- ஆதாரபுவனம் 7.

ஒரு மொழியே பல மொழிக்கும் இடம்கொடுக்கும், அந்த
ஒரு மொழியே மலமொழிக்கும் ஒழிக்கும் என மொழிந்த
குருமொழியே மலைஇலக்கு, மற்றை மொழி எல்லாம்
கோடு இன்றி வட்டு ஆடல் கொள்வது ஒக்கும் கண்டாய்
கருமொழி இங்கு உனக்குஇல்லை, மொழிக்கு மொழிருசிக்கக்
கரும்பு அனைய சொல்கொடு உனைக் காட்டவும் கண்டனைமேல்
தருமொழி இங்கு உனக்கு இல்லை, உன்னைவிட்டு நீங்காத
தற்பரமாய் ஆனந்தப் பொற்பொதுவாய் நில்லே
-மேலது - நினைவு ஒன்று 2.

கோடு இன்றி வட்டு ஆடல் கொள்வது ஒக்கும்- கோடு போடாமல் சொக்கட்டான் விளையாடுவது போன்றது ஆகும், கருமொழி - கருப்பத்திற் பிறப்பெடுப்பதைப் பற்றிய பேச்சு, தற்பரமாய்- சொந்தமாயுள்ள பெருநிலையில் ஆனந்தப் பொற் பொதுவாய்- பொன்னம்பலமாய்.

முதற்பாடலில் இறைவனை அருள் பழுத்த பழச்சுவையே கரும்பே எனப் பேசும் தாயுமானர், அடுத்த பாடலிலே இறைவன் பெரும் புகழைப் பாடும் தமிழை, மொழிக்கு மொழிருசிக்கும் கரும்பனைய சொல் எனக் குறிப்பிடுகின்றார். பட்டினத்தாரும் திருவொற்றியூர்ப் பெருமானைக் கடலருகே நிற்கும் கரும்பு என வாயூறுகிறார்.

கண்டங் கரியதாங் கண்மூன்றுடையதாம்
அண்டத்தைப்போல் வழகியதாந் - தொண்டர்

*எதிர்ப்பவரிடம் துணிந்து நில். மதிப்பவரிடம் பணிந்து செல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு

-பட்டினத்தார் பாடல். பக்.148, திரு வி.க. உரை.

மேம்பட்ட புகழினை வாய்ந்த திருவொற்றியூர் சமுத்திரக் கரையிலே நிற்கின்ற கரும்பு, கண்டம் நிலமுடையதாய், திரிநேத்திரங்களை உடையதாம், ஆகாயத்தை ஒத்த அழகு பொருந்தியதாம், அடியவர்கள் திருமேனி உருகும்படி இனிப்பதாம். (உரை திரு வி.க.)

ஒளவையார் விநாயகர் அகவலிலே

அணுவுக்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புளே காட்டி

எனப் பாடியுள்ளார்.

இரும்பு மனம் வாய்ந்த வாதவூரர் கரும்பின் பெருமையை வெகு நாகரிகமாகப் பாடியுள்ளார்.

கறந்தபால் கன்னலென நெய்கலந்தாற் போல

-சிவபுராணம் 46.

தேனை ஆன் நெயைக் கரும்பின் தேறிலை சிவனை

-சதகம் 33.

இருப்பு நெஞ்ச வஞ்சனேனை ஆண்டு
கொண்டநின்னதாட்
கருப்பு மட்டு வாய்மடுத்து எனைக்க
லந்து போகவும்

-திருச்சதகம் 80.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கரிய நயத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானை

-திருப்பொற்சுண்ணம் 15.

இவ்வண்ணம் தீங்கரும்பின் இன் சுவையையும், கெட்டியான இரும்பின் பண்பையும் ஒரே பார்வையில் காட்டுகிறார் ஆளுடையடிகள். படிப்போரைப் பரவசப்படுத்தும் பாவம் நிறைந்த பாடலிது.

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெலாம்
பெருங்குதிரை ஆக்கிய வாறு அன்றே உன் பேரருளே.

-திருவேசறவு 1.

*சிரித்துக்கொண்டே இரு வலிகள் கூட விலகிக்கொள்ளும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| திரு இராஜநாதன் குடும்பம் | அளவெட்டி | 5000. 00 |
| M. மோகனதாஸ் | உரும்பராய் (கனடா) | 25000. 00 |
| பி. தாரகா | புலோலி | 5200. 00 |
| க. பழனிப்பிள்ளை | இருபாலை | 12000. 00 |
| சி. சிவலிங்கம் | கோப்பாய் | 1000. 00 |
| கி. சியாமளா | கரவெட்டி | 5000. 00 |
| ச. கிரிஜா | தாவடி | 5000. 00 |
| பா. மயூரன் | கனடா | 10000. 00 |
| திருமதி பரமேஸ்வரி நினைவாக | கொக்குவில் | 25000. 00 |
| திரு செல்வராஜா குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| சி. ஆரணன் சுதுமலை 5Kg சி.ப. அரிசி, 1புட்டி அரிசி, சோப், பிஸ்கற், வீவா, நெஸ்ரமோல்ட் | | |
| S. தீபா | இணுவில் | 3000. 00 |
| வி. புவனேஸ்வரி நினைவாக | வட்டுக்கோட்டை | 15000. 00 |
| வி. சுவேதா | அச்சுவேலி | 5000. 00 |
| A. தர்ஷன் | அச்சுவேலி | 2புட்டி அரிசி |
| திரு சண்முகராஜா குடும்பம் | யாழ்ப்பாணம் | 1புட்டி அரிசி |
| தி. வைஸ்ணவி, தி. சங்கவி | லண்டன் | 47000. 00 |
| Dr குகதாசன் | கோண்டாவில் | 10000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | 12000. 00 |
| கு. சுரேந்தர் | உடுப்பிட்டி | 20000. 00 |
| ச. சுதாகர் | கரணவாய் | 5000. 00 |
| கு. சிவதர்சினி | குரும்பகட்டி | 3000. 00 |
| நா. சரஸ்வதி | மலேசியா | 41000. 00 |

*தேவைப்படும்போது தேடப்படுவாய் அதுவரை பொறுமையாய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வே. பாலசுப்பிரமணியம் | அச்சுவேலி | 5000. 00 |
| க. கோமதி | சுன்னாகம் | 10000. 00 |
| V. ஷாம்ராஜ் | மானிப்பாய் | 1மூடை அரிசி |
| க. தர்மலிங்கம் J.P. | நீர்வேலி | 1000. 00 |
| த. சிவனேசன் | அளவெட்டி | 30000. 00 |
| ம. நீலிப்பிள்ளை | அச்சுவேலி | 4000. 00 |
| திரு பாலச்சந்திரா | கோண்டாவில் | 1000. 00 |
| தங்கராசா நினைவாக | அந்தணத்திடல் | 2500. 00 |
| சி. ஞானபண்டிதன் | தாவடி | 5000. 00 |
| கிருஸ்ணன் நினைவாக | கரணவாய் | 10000. 00 |
| திரு சுப்பிரமணியம் குடும்பம் | கனடா | 20000. 00 |
| பா. பாலஜீவன் | அச்சுவேலி | 10000. 00 |
| S. சத்தியசீலன் | நல்லூர் | 5000. 00 |
| சி. சிவலிங்கம் | கோப்பாய் | 1000. 00 |
| S. றோசியா | திக்கம் | 1மூடை அரிசி |
| K. மணிவண்ணன் | நாச்சிமார் கோவிலடி | 1000. 00 |
| ந. விநாயகமூர்த்தி | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| தெ. பாமா | வல்வெட்டி | 1000. 00 |
| செ. விஜயராஜ் | அளவெட்டி | 1000. 00 |
| ப. தர்சினிதேவி | நல்லூர் | 2000. 00 |
| வாணி கல்வி நிலையம் | உரும்பராய் | 1000. 00 |
| க. பரலோகநாதன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| நடராசா சிலோன்மணி | புலோலி மத்தி | 50000. 00 |
| து. சுதாகரன் | காரைநகர் | மரக்கறி, 3புட்டி அரிசி |
| மோ. நிலுஷ்கா | உடுவில் | 10000. 00 |
| ர. நிர்மலா | உரும்பராய் | 10000. 00 |
| கமலா குணரட்ணம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| திரு சன்விர்க்சர்மா | துன்னாலை மத்தி | 5000. 00 |
| சி. சிவசுப்பிரமணியம் | சாவகச்சேரி | 5000. 00 |
| சி. சிவாகர் | லண்டன் | 2000. 00 |
| பொ. சுப்பிரமணியம் | கனடா | 50000. 00 |
| கோ. கீர்த்திக் | நீர்வேலி | 15000. 00 |
| பா. மது | நல்லூர் | 1000. 00 |
| க. ரட்ணகுமார் | உடுப்பிட்டி | 1000. 00 |
| யோ. கமலாம்பிகை | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| பொ. ஜெயானந் | கனடா | 5000. 00 |
| சி. ஜெயராஜா | கனடா | 10000. 00 |
| த. மனோன்மணி | மல்லாவி | 5000. 00 |

*தேடலும் தேவையும் தீர்வதேயில்லை மனித வாழ்வில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சி. லதுனன் | புத்தூர் | 10000. 00 |
| T. லலிதாவதி | சங்கானை | 5000. 00 |
| ஐ. கணேசலிங்கம் | லண்டன் | 2000. 00 |
| ந. ஸ்ரீமுகுந்தன் | அரியாலை | 5000. 00 |
| K. தேவபாலா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ந. சங்கரப்பிள்ளை | கனடா | 50000. 00 |
| பி. சகஸ்வினி | அளவெட்டி (சமூகப்பணி) அரிசி | 5000. 00 |
| S. திவாயினி | சுன்னாகம் | 1000. 00 |
| ச. அக்ஷயன் | புத்தூர் வடக்கு | 50000. 00 |
| ச. விமலதாசன் | சரசாலை | 1000. 00 |
| திரு சௌந்தரஸ்ரீதரன் குடும்பம் | சரசாலை | 5000. 00 |
| திருமதி R. சண்முகலிங்கம் | கனடா | 500. 00 |
| பௌனி நாகபூஷணி ஆலயம் | பிரான்ஸ் | 8460. 00 |
| சிவம் செந்தூரன் | தம்பாலை | 2000. 00 |
| K. மணிவண்ணன் | சுதுமலை | 2000. 00 |
| சு. நயனிதன் | சுதுமலை | 5000. 00 |
| திரு ஸ்ரீஸ்கந்தராசா குடும்பம் | பொலிகண்டி | 2000. 00 |
| திரு செந்தில்நாதன் குடும்பம் | அரியாலை | 3000. 00 |
| பி. கிருத்திகன் | கட்டைப்பிராய் | 25000. 00 |
| உ. சரண்யா | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| J. கணதீபன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| T. யோகேந்திரன் | ஜேர்மனி | 2000. 00 |
| யோ. சிவகுமார் | இத்தாலி | 10000. 00 |
| புஸ்பவேணி குடும்பம் | தாவடி | 5000. 00 |
| இ. இதயரூபன் | கொழும்பு | 2000. 00 |
| திரு ஐயாத்துரை குடும்பம் | குப்பிளான் | 2புட்டி அரிசி |
| பசுபதி சபாபதி | உடுப்பிட்டி | 50000. 00 |
| ஐ. சர்மிளா | மானிப்பாய் | 1000. 00 |
| சு. வினோத் | கரவெட்டி | 10000. 00 |
| மா. கஜேந்திரன் | அவுஸ்திரேலியா | மரக்கறி 1மூடை அரிசி |
| A. அருட்குமார் | பருத்தித்துறை | 10000. 00 |
| S. ஜெகதீஸ்வரன் | கோப்பாய் | 1000. 00 |
| R. குகன் | கொக்குவில் | 20000. 00 |
| ர. சுதாகரன் | லண்டன் | 10000. 00 |
| கு. அஞ்சனன் | கனடா | 10000. 00 |
| சி. மதுமிதா | லண்டன் | 5000. 00 |
| வி. விஜயகுமார் | சங்கானை | 4000. 00 |
| சி. சிவலிங்கம் | கோப்பாய் | 1000. 00 |


(தொடரும்...

*உங்களை நீங்களே மதியுங்கள் அப்போதுதான் பிறர் உங்களை மதிப்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் 04 பாடசாலை மாணவர்களுக்கு 172,000. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.



ஆசைப்படுங்கள் தவறில்லை. பேராசையே வாழ்க்கைக்கு கேடு விளைவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடையார்கட்டு - முல்லை இசை கலாலயத்துக்கு பிள்ளையார் சிலை அமைப்பதற்காக 25,000. 00 ரூபாவும், யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களின் பரீட்சை தேவைக்காக எழுதுபொருட்களும் வழங்கப்பட்டன.



வார்த்தைகளில் உண்மை இல்லையெனில் எண்ணங்களில் தூய்மை இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆச்சிரமத்தின் சமுதாயப் பணிகளின் வரிசையில் வவுனியா கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலைக்காக 22 இலட்சம் ரூபா பெறுமதியில் புதிய கட்டிடம் அமைத்துக்கொடுக்கப்பட்டு 15.09.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.



எண்ணங்கள் அழகானால் வாழ்க்கையும் அழகாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமுதாயப் பணிகளின் வரிசையில் முல்லைத்தீவு கேப்பாப்பிளவு கிராமத்தைச் சேர்ந்த விழுப்புண் அடைந்த முன்னால் போராளி குடும்பத்திற்கு 66,000. 00 ரூபா பெறுமதியான கடற்றொழில் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக 550,000. 00 ரூபா பெறுமதியான நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டது.





*அவமானத்தின் வலி அழகிய வாழ்க்கைக்கான வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்வத்தின் மகிமை

– *திரு வி. செல்வரத்தினம்* அவர்கள் –

மண்ணுலக ஆன்மாக்களின் பாவங்களைப் போக்கும் பொருட்டுச் சிவபெருமானின் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி ஆகியவற்றின் வடிவமாகச் சிவனருளால் தோன்றியதுதான் வில்வம்.

தேவலோகத்தைச் சேர்ந்த தெய்வாம்சம் பொருந்திய ஐந்து மரங்களுள் ஒன்று வில்வம். பாதிரி, வன்னி, மா, மந்தாரை, வில்வம் ஆகிய ஐந்தும் தேவலோகத்துப் பஞ்ச தருக்கள் என்று போற்றப்படுகின்றன. நமது புராணங்கள் இந்த ஐந்து மரங்களுள் ஸ்பரிச தீட்சை தரும் புனிதம் வாய்ந்தது வில்வ மரம் என்று கூறுகிறது. அதாவது, அதன் கிளைகளையும் இலைகளையும் தொட்டு ஸ்பரிசித்து உட்கொண்டு வந்தால், மோட்சம் கிட்டும் என்பது இதன் பொருள்.

வில்வ இலையில் திருமகள் வாழ்கின்றாள். எனவே, வில்வ மரத்திற்குத் திருமரம் என்ற பெயரும் உண்டு. வில்வ மரம் சிவ சொருபமானது. முருகப் பெருமானுக்கும் பிரியமான மரம். மூலிகைகளைக் கொண்டதும் முக்குணங்களைக் குறிப்பதும் முக்கண்களைக் குறிப்பதும் திரிசூலத்தைக் குறிப்பதும் மூன்று ஜென்ம பாவங்களை எரிப்பதுமாகிய வில்வ இலையைச் சிவனுக்கு அர்ப்பணிப்பது சிறப்பாகும். சிவபெருமானைத் துதித்து ஒரு வில்வம் மரத்தைச் சமர்ப்பித்தாலும் மனப் பாவங்கள் விலகிச் சுபம் ஏற்படும்.

வில்வம் இலையைக் கொண்டு சிவனுக்கு இலட்சார்ச்சனை, கோடி அர்ச்சனை போன்ற சிறப்பான பூஜைகளைச் செய்பவர்களுக்குச் சிவபெருமான் மிகவும் எளிதாக அருள்புரிவார். சிவபெருமானை வில்வ இலைகளாலும் மாலைகளாலும் அலங்கரிப்பது சிறந்ததாகும். வில்வமரம் அபூர்வமான மரம். நிறைவான சிவ வழிபாட்டிற்கு வில்வம் இலைகள் நிச்சயம் தேவை. எல்லாக் காலங்களிலும் வில்வம் இலை கிடைப்பது அரிது. எனவே வில்வம் இலை கிடைக்கும்போது போதுமான வில்வம் இலைகளை எடுத்து வைத்துக்கொண்டு அவற்றை அடிக்கடி தூய்மைப்படுத்தி ஆறு மாதங்கள் வரை வழிபாட்டிற்குப் பயன்படுத்தலாம். இதுதான் வில்வத்திற்குரிய தனிச்சிறப்பாகும்.

அஷ்ட வில்வங்களில் முதலிடம் வகிப்பது வில்வம்தான். மற்ற ஏழும் துளசி, நாயுருவி, வள்ளி, நெல்லி, நீர்முள்ளி, பலா, அறுகு என்பனவாகும்.

பரமேஸ்வரனின் அடையாளங்களுள் ருத்ராஷ்டம், திருநீறு, பஞ்சாட்சரம் தவிர வில்வமும் ஒன்றாகும். அபிஷேகப் பிரியனான சிவனுக்கு மிகவும் பிரியமானதும் சிவ பூஜைக்கு வேண்டியதும் வில்வம்தான். ஒரு வில்வத்தை ஈசனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம் சகல பாவங்களும் நீங்கி நன்மைகள் யாவும் பெற முடியும். சிவனை வில்வத்தால் அர்ச்சிப்பது உத்தமம். மேலும், ஞாயிற்றுக்கிழமைகளில் சிவனை வில்வம் இலையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சிப்பது மிகச் சிறப்பாகும். அவரின் கருணை நிச்சயமாகக் கிடைக்கும். சிவனுக்குச் சிறப்பான அர்ச்சனை பஞ்சமுக அர்ச்சனையாகும். அப்போது பயன்படுத்துபவை வில்வம், கிளுவை, விளாத்தியிலை, நொச்சியிலை, மாவிலங்கை இலை.

வில்வ மரம் வளர்ப்பதனால் பின்வரும் பயன்களைத் தரும் எனச் சாத்திரங்களில் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன:-

அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும், ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பெரும் புண்ணியம் கிடைக்கும், கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும், காசி முதல் இராமேஸ்வரம் வரையுள்ள சிவத்தலங்களை வழிபட்ட பலன் கிடைக்கும்.

வில்வ மரத்தை முறைப்படி விரதமிருந்து பூசிப்பவர்கள் அனைத்து நன்மைகளையும் அடைவார்கள். பழமையானவை, உலர்ந்தவை என்ற குறையெல்லாம் வில்வ இலைகளுக்கு இல்லை. அவற்றைப் பறித்த நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு வைத்துப் பயன்படுத்தலாம். புழுக்கள் முதலியன கடித்த வில்வம் இலைகளை வழிபாட்டுக்குப் பயன்படுத்தக்கூடாது. மேலும் இடுகாடு முதலிய தூய்மையற்ற இடங்களில் பறித்த இலைகளையும் பயன்படுத்தக் கூடாது.

வில்வம் இலையைச் சிவனுக்கு அர்ப்பணித்தால், சகல பாவங்களும் நீங்கி அனைத்து நன்மைகளும் கிடைக்கும். மாதப்பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தசி, அட்டமி, நவமி ஆகிய நாட்களில் எதற்கும் வில்வம் பாவிக்கக்கூடாது.

வில்வத்தின் பெருமை சாஸ்திரங்களில் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. வில்வத்தின் மூன்று இலைகள் சிவபெருமான் ஏந்தியுள்ள திரிசூலத்தின் வடிவத்தையும் இறைவனின் முக்கண்களையும் காட்டுகிற வடிவமாக அமைந்துள்ளது.

வில்வத்தில் திருமகள் இருப்பதால், அடியார்கள் செல்வங்களையெல்லாம் இறைவன் திருவடிகளிலேயே அர்ப்பணித்துவிட்டு, அவன் திருவருளை மட்டுமே வேண்டுகின்ற நிலையை வில்வ அர்ச்சனை காட்டுகிறது.

## வில்வ மரத்தின் மகிமையை விளக்கும் ஒரு கதை

அரசன் ஒருவன் கொடுங்கோலனாக இருந்து ஆட்சி செய்து வந்தான். அரசன் அடிக்கடி காட்டுக்குப்போய் வேட்டையாடுவது வழக்கம். காட்டுக்குப் போகும்போது தங்கியிருந்து வேட்டையாட வசதியாக குளக்கரையில் ஒரு வில்வமரத்தை நட்டு வளர்த்து வந்தான். ஒரு சமயம் அவன் வழக்கம்போல் காட்டிற்குச் சென்று வேட்டையாடி முடிந்ததும் இளைப்பாறுவதற்காகத் தான் நட்டு வளர்த்த வில்வத்தை நோக்கிச் சென்றான். அரசன் வில்வ மரத்தை நெருங்கியபோது, அங்கிருந்த முனிவர் ஒருவரின் விபூதித் துகள் காற்றில் பறந்து வந்து அவன் முகத்தில் பட்டது. அவ்விதம் விபூதி பட்டவுடன் நல்லுணர்வு வரப்பெற்ற அரசன், முனிவரைப் பார்த்து வணங்கினான்.

முனிவர் அரசனை நோக்கி, "மன்னா! நீ இரக்கமற்ற கொடுங்கோலனாக இருந்தாலும், வில்வ மரத்தின் பெருமைகளை அறியாமலேயே அதைப் பிரதிஷ்டை செய்து அவ்வப்போது

அதன் அடியில் தங்கியதால், உன் பாவங்கள் உன்னை விட்டுப் போய்விட்டன. நீ இப்போது புனித மனிதனாக மாறிவிட்டாய்" என்று கூறி அவனை ஆசீர்வதித்தார்.

மேலும், வில்வ மரத்தின் மகிமையைக் கூறும் இன்னும் ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு. ஒரு வேடன் சிவராத்திரித் தினமன்று புலிக்குப் பயந்து வில்வ மரத்தில் உட்கார்ந்து வில்வம் இலைகளைப் பறித்து இரவு முழுவதும் கீழே போட்டுக்கொண்டிருந்தான். வில்வ மரத்தின் கீழே இருந்த சிவலிங்கத்தின்மேல் அந்த இலைகள் விழுந்தன. சிவராத்திரியன்று பூஜை செய்ததன் பலனாக அவனுக்குச் சிவதரிசனமும் கயிலாயநாதரின் அருளும் கிட்டியது.

மேலும், சிவபெருமானுக்கு உரிய நட்சத்திரம் திருவாதிரை. ஆம்! வானசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் திருவாதிரையை எரி நட்சத்திரம் என்று கூறுகிறார்கள். இந்த நட்சத்திரத்தைப் படமெடுக்க முயற்சி செய்தால், படம் விழுவதில்லை. மாறாக கமெராவில் உள்ள பிலிம்றோல்தான் சாம்பலாகி விடும். பலர் முயன்றும் தோல்வியைத்தான் சந்திக்கிறார்கள் ஆனால், இறுதியில் ஜேர்மனியைச் சேர்ந்த ஓர் ஆராய்ச்சியாளர் புகைப்படம் எடுத்து வெற்றி பெற்றார். அந்தப் படம் சூரியனைப்போல் பிழம்பாக இருந்தது. ஏன் அப்படியென்றால், படம் எடுத்த அன்று திருவாதிரை நட்சத்திரத்தின் நேர்கோணத்தில் திருவோண நட்சத்திரம் இருப்பதைக் கண்டுபிடித்தார்.

இதன்மூலம் திருவாதிரை நட்சத்திரம் வெப்பத்தைக் கொடுக்கக்கூடியது என்றும் திருவோணம் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது என்றும் அறியமுடிகிறது. இதனால்தான் ஞானத்தில் உயர்ந்த முனிவர்கள் சிவனுக்கு அதிக குளிர்ச்சியான வில்வத்தையும் வெப்பத்தைக் கொடுக்கக்கூடிய துளசியை மகாவிஷ்ணுவுக்கும் அர்ச்சனைக்குப் பயன் படுத்தினார்கள்.

மூவிலைகளைக் கொண்டதும் முக்குணங்களைக் குறிப்பதும் முக்கண்களைக் குறிப்பதும் திரிசூலத்தைக் குறிப்பதும் மூன்று ஜென்ம பாவங்களை எரிப்பதும் ஆகிய வில்வத்தைச் சிவனுக்கு அர்ப்பணித்தால், சகல சிறப்பும் உண்டாகும். பத்திரம் உலர்ந்து போனாலும், ஏற்கனவே பூஜை செய்யப்பட்ட நிர்மால்யமாக இருந்தாலும், பூஜை செய்வதற்குத் தகுதியுடையது. வீட்டில் பூஜை செய்ய இயலாதவர்கள் சிவாலயம் சென்று வில்வத்தால் அர்ச்சனை செய்து வழிபட்டால், சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

**வில்வத்தின் மருத்துவப் பயன்**

வில்வ மரத்தின் வேர், பட்டை, இலை, பழம் முதலியவை நோய் தீர்க்கும் மருந்தாகும். குடற்புண், இரத்தக் கொதிப்பு, இரத்தச்சோகை முதலிய வியாதிகளுக்கு வில்வ இலை குணம் தரும். வில்வ மரத்தின் தனி இலைகளைப் பறித்து வதக்கி எடுத்து இளஞ்சூட்டுடன் கண் இமையில் ஒற்றடம் செய்ய கண் வலிகள், கண் சிவப்பு, கண் அரிப்பு போன்றவை சரியாகிவிடும். இலையை மென்று சாப்பிடுவதால், உடல் உஷ்ணம் குறையும். வில்வ மலர் நா வரட்சி, வாந்தி ஆகியவற்றைத் தணிக்கும்.

*செய்வதை விரும்பிச் செய்வதைவிட நம்பிக்கையோடு செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடலிலுள்ள கிருமிகளையும் புழுக்களையும் அவ்வப்போது வெளியேற்ற வேண்டு மானால், தினமும் ஐந்து வில்வ இலைகளை வெறும் வயிற்றில் மென்று சாப்பிட வேண்டும். இதனால் மலச்சிக்கல் நீங்கும்.

வில்வ கொத்துக்கள் ஊற வைக்கப்பட்ட நீரால் குளித்து, சவர்க்காரம் போடாமல் பயற்றம் பொடியால் உடலைத் தேய்த்துக்கொண்டால், சரும வியாதி எதுவும் அண்டாது. மாத விலக்கு வரம்புக்கு மீறி ஏற்படும் மாதர்களுக்கு, வில்வ இலையை அரைத்து அதிகாலையில் உண்ணக்கொடுத்தால், இரத்தப்போக்கு உடனே கட்டுப்பட்டு விடும்.

வில்வ வேரைச் சிறிதளவு இடித்து, ஒரு டம்ளர் நீரில் கொதிக்க வைத்து, காய்ச்சிய பசும்பாலுடன் சேர்த்துத் தினமும் காலையில் உண்ணும் ஆண்கள் ஆண்மைத் திறமும் முகப்பொலிவும் அடையப்பெறுவர்.

வில்வ இலையைத் தண்ணீரில் பன்னிரண்டு மணி நேரத்திற்கும் குறையாமல் ஊற வைத்து, அதன் பின்னர் அந்நீரை உட்கொள்வதால் உடம்பின் ஒவ்வொரு அணுவும் புத்துயிருட்டப்படுகிறது. அதாவது வில்வ இலை நீரில் செலுத்திய மின்காந்த அலைகள் நமது உடலுள் புகுந்து செயற்படுவதே இதற்குக் காரணம். மற்றும் செப்புக் குவளையிலும் வைத்த நீரில் வில்வ இலையை ஊறப்போடும்போது, அதிர்வலைகளின் செயல் வேகம் மேலும் அதிகரிக்கிறது.

வில்வ இலையைக் காய வைத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு, காலையில் வெறும் வயிற்றில் அரைத் தேக்கரண்டி வாயில் போட்டு விழுங்க வேண்டும். ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். இரவும் அதுபோல் செய்து வந்தால் கீழ்க்கண்ட வியாதிகள் நீங்கும்.

கண் பார்வை தெளிவாகும்
மூக்கடைப்பு, சளி, இருமல் ஆகியன போகும்
பல் சொத்தை, பல் வலி, பல் கூச்சம் ஆகியவை நீங்கும்
சொத்தைப் பற்கள் குணமாகும். தோல் அரிப்பு இருக்காது
இரத்த அழுத்தம் நீங்கும், சர்க்கரை நோய் சீராகிக் குணப்படும்.
வாயுத்தொல்லைகள் நீங்கும்.
குடற்புண் இருக்காது. உமிழ்நீர் சுரந்து ஜீரண சக்தியை அதிகமாக்கும்.
உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

வில்வத்தைக் கொண்டு பலவகையான தைலம் செய்து வேண்டிய நோய்க்கும், அதேபோல் வில்வாதி குளிசையைத் தயாரித்து வேண்டிய நோய்களுக்கும் பாவிக்கலாம்.

வில்வம் பழங்களில் இருக்கும் சதைப் பகுதியை நீக்கிப் பின் உலர்த்திக் குடுவை ஆக்கிச் சைவர்கள் விபூதி வைத்துக்கொள்ளவும் பயன்படுத்துவதுண்டு. இதனால் மங்கலம் உண்டாகும் என்பது சான்றோர்களின் கணிப்பு.

---

எத்தனை பூஜை, தியானம், தவம் செய்தாலும் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றும் எண்ணம் மட்டும் இல்லையெனில் அத்தனையும் போய்விடும். இறைவன் நீ செய்யும் செயலைப் பார்ப்பதில்லை. உன் உணர்வுகளைத்தான் பார்க்கிறார்.

*நீ வெற்றிபெறும் பொழுதெல்லாம் உன் முதல் தோல்வியை நினைத்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சிரம சுவாமிகளின் பவளவிழா

– *தொகுப்பு: செல்வி தயாளினி குமாரசாமி* அவர்கள் –

ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாணத்தில் கலைவளமும், கவிவளமும், இயற்கை எழிலும் சூழ்ந்த ஊர் தொண்டைமானாறு. அரசர்கள் படை சூழ்ந்த வீரமண். மறவர்கள் தனைச் சுமந்த மண். கலைஞர்கள் பலரைப் பிரசவித்த மண். அறத்துக்குப் புகழ் பூத்த மண். இம்மண், தமிழ்க் கடவுளான முருகனால் புகழ்பெற்றது. தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயம் வருகின்றவர்கள் வினை தீர்த்து, அபயகரம் அளித்து, அன்னம் வழங்கு வதால் அன்னதானக் கந்தன் எனப் பெயர் பெற்றிற்று. இம் மண்ணில் அறத்துக்கு புகழ் பூத்து, நாட்கள் கடந்து, மாதங்களாகி, வருடங்களாகி, வருடங்கள் தசாப்தங்களாகி, தசாப் தங்கள் கால் நூற்றாண்டுக்கு மேலாகி, தன் பணி முருகன் அடியவர்களது பசிப்பிணி போக்கி தர்மத்தினை அளிப்பது எனும் நோக்கோடு செயற்பட்டு வருபவர் சந்நிதியான் ஆச்சிரமத்தினுடைய ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமி. மாறிவரும் உலகில் இறைபணி ஒன்றே உயர்ந்த நோக்கான குறிக்கோள் என்பதனை உணர்ந்து அன்னதானப்பணி, கல்விப்பணி, மருத்துவப்பணி, சமுதாயப்பணி எனப் பல பணிகளை மானசீகமாக முருகனது அருளோடு நிகழ்த்தி வரும் பெருந்தகைத்தன்மையால் பெருமகனானார்.

அறத்திற்கு புகழ்பூத்த கலாநிதி மோகனதாஸ் சுவாமியினுடைய 75ஆவது பிறந்த நாள் நிகழ்வும், பவளவிழா நிகழ்வும் கடந்த ஆவணி மாதம் 31ஆம் தேதி 2024ஆம் ஆண்டு வெகு விமரிசையாக, சீரும் சிறப்புமாக சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் காலை 09.00 மணியளவில் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஒழுங்கமைப்புடன் இடம்பெற்றது. வாழை தோரணங்கள் கட்டப்பட்டு, பக்திமயமான பாடல்கள் ஒலிக்கப்பட்டு நிகழ்வுகள் ஆயத்தப்படுத்தப்பட்டு இருந்தன. கலாநிதி மோகனதாஸ் சுவாமி தம்பதிகள் சகிதமாக பேராசிரியர்கள் திரு. திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தம்பதியினரால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, பூரண நிறைகுடம் ஏற்றப்பட்டு, ஆராத்தி எடுக்கப்பட்டு ஆச்சிரம முகப்பில் இருந்து விழா மண்டபத்திற்கு அடியவர்கள் விழாக் குழுவினர்கள் புடைசூழ அழைத்து வரப்பட்டார். இவ்வாறு அழைத்து வரும்போது அருகிலிருந்தவர்கள் சிலரது வாயிலிருந்து “அரோகரா, அரோகரா” எனும் கோஷமும், “முருகா முருகா” எனும் கோசமும் ஒலிப்பதனைக் காணக்கூடியதாக இருந்தது. சிலர் இரு கரம் கூப்பி இறைவனை வழிபடுவதுபோல் தம்மை மறந்து நின்றனர். ஆனந்தக் கண்ணீரை அர்ப்பணமாக்கி சிலர் தம் மானசீக பக்தியை வெளிப்படுத்தினர். உண்மையில், கம்பீரமான தோற்றமும், எளிமையும், சொல்லுறுதியும் அவரிடம் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும் பண்புகளாகும். இதில் எந்த மாறுதல்களையும் பவளவிழாவில் காணக்கூடியதாக இல்லை. பெருமையோ, விளம்பரமோ, ஆடம்பரமோ அற்று இறைவனின் அம்சமாக வந்து அமர்ந்தமை என் கண்ணில் நிழலாடிக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்திலேயே பவளவிழாவில் நிறைந்த அவையோடு படித்தவர், படிக்காதவர், பணக்காரர், வறியவர், கலைஞர்கள், நலிந்தோர், மெலிந்தோர் என்ற எந்த வேறுபாடுமின்றி எல்லோருக்கும் சமமான அவையாக, விழாவாக அன்றைய நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு இருந்தது. இந்நிகழ்வில் யாருக்கும், விசேட வரவேற்புகளோ, விசேட சலுகைகளோ இல்லை. எல்லோரும் விழா நாயகனின் அன்பில் ஈர்க்கப்பட்ட அடியார்கள். சிறு வயதிலிருந்து யான் ஆச்சிரமம்மீதும், ஆச்சிரம முதல்வர்மீதும் கொண்ட பற்றிலும், ஊடாட்டத்திலும் பார்த்த, இரசித்த விடயம் யாவரும் சமமே எனும் கோட்பாடுதான் அன்றும் அவ்வாறுதான். இந்த விழா ஒரு பிறந்த நாள் கொண்டாட்டம் பவளவிழா என்று வேடிக்கையாகவோ, கேளிக்கையாகவோ ஆரம்பிக்கப்படவில்லை. சமய கலை பண்பாடு சிறிதும் குறையாது பண்பாட்டு நிகழ்வாகவே தொடங்கப்பட்டது. இதுவே இந்நிகழ்வின் முத்தாய்ப்பு.

மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பிக்கப்பட்டு இதனை சந்நிதியான் ஆச்சிரம பேரவையைச் சார்ந்த திரு ஆ. சிவநாதன் (ஓய்வுநிலை அதிபர்) நிகழ்வுகளை வழிப்படுத்தினார். மண்டபத்திற்கு விழா நாயகன் தம்பதிகளோடு மேடைக்கு வந்தபின்பு, செல்வி தயாளரூபினி குமாரசாமி பஞ்சபுராணம் ஓதி விழாவினை பக்திமயமாக ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து ஊர்கடந்து, மாவட்டம் கடந்து, மாகாணம் கடந்து வருகை தந்த பண்டாரவளை மகா வித்தியாலய மாணவிகளது வரவேற்பு நடனம் இடம்பெற்றது. இது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்றினைப் பெற்றதோடு, பாராட்டுதலையும் பெற்றது. தொடர்ந்து வரவேற்புரையை ஆசிரியர் திரு க. கைலைநாதன் அவர்கள் முன்வைத்தார். விழா ஆரம்பத்திலேயே சனத் திரளுடன் இருந்த அவையானது, வரவேற்புரை நிகழ்த்தி முடித்த நேரத்தில் அலைகடல் பெரிதோ, அவை மக்கள் கூட்டம் பெரிதோ எனும் எண்ணும் அளவிற்கு ஆச்சிரமம் முழுவதும் வந்து அடைந்தனர். உண்மையில் இந்நிகழ்வு நடைபெறப் போகின்றதென்பதை அறிந்து, சந்நிதியான் ஆச்சிரமத்தின்பால் ஈடுபாடு கொண்ட மக்கள் கூட்டம் அலைகடல் என மோதியது. ஒரு கணம் எனக்கு சந்நிதியான் கோயில் திருவிழாவோ எனத் தோன்றிற்று. இவ்வாறு நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதும் ஐயாவினுடைய கண்கள் நடக்கும் செயல்களில் ஏதாவது குழப்பங்கள் இடம்பெறுகிறதோ எனச் சல்லடை போட்டுக் கொண்டிருந்தது. ஐயாவினுடைய பாரியார் குட்டியம்மா அவர்கள் அவ்விடத்தில் இருந்தாலும் அவரது விழிகளும் எண்ணங்களும் சமையற்கட்டுப் பக்கம் எட்டிப்பார்ப்பதை ஊகிக்கக்கூடியதாக இருந்தது. அந்தநேரத்தில், வந்த அத்தனை விருந்தாளிகளுக்கும் சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள், சூடான பானங்கள் குறைவிலாது வழங்கி வைக்கப்பட்டுக்கொண்டிருந்தன. குறிப்பாக இந்த நிகழ்வுகளுக்கு வருகை தந்த குழந்தைகள், சிறுவர்கள் இரசித்து உணவுகளை உண்ணுகின்ற அழகு ஒருவித ஆழமான பிரமிப்பைத் தந்தது. ஒவ்வொரு குழந்தையும் முருகன்போல் இருந்தது. இந்த விழாவிற்கு ஆச்சிரமத்தினுடைய மீளா அன்பர்கள் தாமே முன் வந்து தங்களால் இயன்ற சிற்றுண்டிகளை வழங்கி வைத்தமையும், அதனை ஆச்சிரமத்தின் அன்னத்தை நேர்த்தியுற மற்றவர்களது பசிப்பிணி தீர தினம் தொண்டு புரியும் அன்பர்கள் பரிமாறியதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நிகழ்வுக்கு உரிய ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் 2ஆவது சந்நிதானம், சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் ஆகியோரால் நிகழ்த்தப்பட்டன. இவர்கள் நிகழ்வுகள் சிறப்பாக நடாத்தப்படுவதற்கான ஆசியையும், ஐயாவுடன் கொண்டிருந்த தொடர்பு அவரது அன்ன அறப்பணிகளது சிறப்புப் பற்றி கூறியமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் பின்னர் அதிபர் திரு ச. லலீசன் (கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) அவர்களது சிறப்புரை இடம்பெற்றது. இவர் ஆச்சிரமம்மீது கொண்டிருந்த தொடர்பால் பல விடயங்களை அனுபவம் சார்ந்தும், ஆச்சிரம முதல்வர் எவ்வாறு பணிகளை ஆற்றி மக்கள் மனம் கவர்ந்தார் என்பதையும் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். குறித்த நேரம் வழங்கப்பட்டதால் எல்லாவற்றையும் குறிப்பிட முடியாது. ஆயினும் மிக முக்கியமான விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஒவ்வொரு உரைகள் நடைபெறும்போது இடையிடையே கௌரவிப்புக்களும் கலாநிதி மோகனதாஸ் சுவாமிக்கு இடம்பெற்றது. இதனை கௌரவிப்பு என்று கூறுவதிலும் பார்க்க ஐயாவின்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு என்பதே பொருத்தமுடையது. ஒவ்வொருவரும் தமது அன்பினை வெவ்வேறு விதமாக வெளிப்படுத்தினர். இந்த நிகழ்வில் ஒரு சிறப்பு என்னவெனில் யாழ் கடந்த வடக்கு கடந்து, கிழக்கு, மலையகம் என பல இடங்களில் இருந்தும் ஐயாவினுடைய பவளவிழா காண வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஐயா அன்னதானப் பணி கடந்து அறப்பணிகளையும் யாழ்ப்பாணத்தோடு மட்டுப்படுத்தாது ஏனைய பிரதேசங்களிலும் செய்தமையினை அன்று வந்து சில வார்த்தைகளை அன்பாக நாயகனுக்கு அர்ப்பணித்தமையினூடாக அறியக்கூடியதாக இருந்தது.

அறநெறிப் பாடசாலைக்குரிய கட்டிடம் அமைத்தல்

மண்சரிவு காலத்தில் உணவுப்பொருட்களை குறைவிலாது அளித்தமை.

மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் சீருடைகள் வழங்கியமை.

ஆலய புனருத்தாரணத்திற்கு உதவியமை.

மருத்துவச் செலவுகளை இடர்பட்ட காலத்தில் மக்களுக்கு வழங்கியமை.

குடிநீர் வசதிகளை ஏற்படுத்தியமை.

யாத்திரிகர்களுக்காக யாத்திரை ஒழுங்கமைப்பைச் செய்தமை.

இலவசமாக மேலதிக வகுப்புக்களை பிரதேசத்துக்கு பிரதேசம் நடத்தியமை.

இவ்வாறு பலவிதமான விடயங்களை உருக்கமாக அன்பர்கள் கூறியமையினை அறியக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு அன்பர்களது கூற்றுக்களையும் கேட்கும்போது ஐயாவின்மீதும் ஆச்சிரமத்தின்மீதும் அவர்கள் கொண்டிருந்த அன்பு, பணிவு, மரியாதை என்பன புலனாகிற்று. உண்மையில் சிறுவர்கள், பெரியவர்கள் என எந்த வேறுபாடுமின்றி ஒவ்வொரு மக்களும் விழா நாயகரிடம் ஆசிபெற்று தமது அன்பைக் காணிக்கையாக்குவதைப் பார்த்தபோது உளம் புளகாங்கிதம் அடைந்ததோடு, ஒரு மனிதன் வாழும்போது மனதில் வாழ்கின்ற உயரிய இடத்தை காணக்கூடியதாய் இருந்தது. தொடர்ந்து ஐயாவினுடைய பணிகளையும் சிறப்புக்களையும் சேவைகளையும் விளக்கும் முகமாக "அறம் பாலிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான மோகனம்" எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந் நூலிற்கான வெளியீட்டு உரையினை இளைப்பாறிய இசை ஆசிரியர் திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் மிகவும் காத்திரமாக வழங்கினார். இந்நூலானது ஐயாவினுடைய பவளவிழாவிற்கான நூலாவணமாகவும், வரலாறு சார் பெட்டகமான பல விடயங்களை உட்கொண்டு காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்நூலிற்கான சிறப்புப்பிரதிகளை பலர் விருப்புடன் வேண்டினார்கள். வரவேற்புரை நடந்தது தொடக்கம் விழா ஈற்று நிலையினை அடையும்வரை அன்பர்களால் விழா நாயகன் மனைவியோடு கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வாழ்த்துப் பா வழங்கியும் விருது வழங்கியும் பவளவிழா நாயகன் கௌரவிக்கப்பட்டார். வாழ்த்துப் பாவினை ஆசிரியை திருமதி சசிலேகா ஜெயராசன் அவர்கள் அவை முன்னிலையில் வாசித்து விழா நாயகனுக்கு சமர்ப்பணம் செய்தார்.

கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளது பணிகளை விளக்கி, படங்களைத் தொகுத்து அவற்றினை ஆவணப்படுத்துவதாக "அமிர்த மழை" எனும் ஆவணம் விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி அவர்களினால் ஆக்கப்பட்ட தொகுப்பாக வெளியிடப்பட்டது. இதில் ஆச்சிரம உருவாக்கம், வரலாறு, வளர்ச்சி, கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளுடைய சிறப்பு, பெருமை, பணிகள் என்பன விரிவாக விளங்கப்படுத்தி காணொளி ஆவணமாக வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆவணச் சித்திரமானது சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளை கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் செய்யும் இடங்களையும், படங்களையும் தொகுத்து பாடலாக்கி அதனை திரு இ. தயாபரன் அவர்கள் வெளியிட்டு வைத்தார். இதன் மூலமாக சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளை அடையாளப்படுத்தமுடியும். அமிர்த மழை மற்றும் ஆவணச்சித்திரம், மற்றும் அறம் பாலிக்கும் ஞான மோகனம் எனும் ஆவணங்கள் எதிர்காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமச் சிறப்பை அறிய உதவும் வரலாற்றுப் பெட்டகம் ஆகும் என்பது குறித்தற்குரியது.

அதனைத் தொடர்ந்து செல்வி அ. நிலாவினி அவர்களின் தனி நடனம் இடம்பெற்றது. அந்நிகழ்வானது விழாவில் கூடியிருந்த பார்வையாளர்ளின் பாராட்டினைப் பெற்றது.

பின்னர் பவளவிழா நாயகனது ஏற்புரை இடம்பெற்றது. அதில் அவர் முருகனின் எண்ணமும், என் மனத் திண்ணமும் ஒருங்குசேர யான் செய்கிறேனேயொழிய இது என் செயலன்று என்றும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்த வருகை தந்த விருந்தினர்களுக்கும் நன்றி கூறினார். தொடர்ந்து அதிபர் செ. பரமேஸ்வரன் அவர்கள் பவளவிழா நிகழ்வின் நன்றியுரையை நிகழ்த்தினார்.

உண்மையில் எந்தவொரு எதிர்பார்ப்புமின்றிய நிகழ்வாகவும், அன்பினாலும், மரியாதையும் சேர்ந்த அன்பர் கூட்டத்தினால் நிகழ்ந்த ஒரு பவளவிழா என்றுதான் கூறவேண்டும். ஐயா அவர்கள் நூற்றாண்டு விழாவினையும் கண்டு மக்கள் மனம் வெல்லும் அறவோனாக வாழவேண்டும் என்று என் பெருமான் முருகனின் பாதக்கமலங்களைப் பணிகின்றேன்.

*நட்பு எப்போதும் ஒரு இனிமையான பொறுப்பே தவிர அது ஒருபோதும் வாய்ப்பு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் எமக்கு தரும் நன்மைகள்

*–திருமதி பொ. திலகவதி* அவர்கள்–

சூரிய பகவான் நவநாயகர்களின் தலைவராவார். மூவகை குணங்களில் சாத்வீக குணமாகவும் இருப்பவர் சத்திரிய குலத்தவர். சிவனது முக் கண்களில் வலக் கண்ணாக இருப்பவர் சூரியன். ஒரு ஜாதகத்தின் பித்துருகாரகன் (தந்தை) ஆவார். இவர் ஒவ்வொரு ராசியிலும் சுமார் ஒரு மாத காலம் சஞ்சாரம் செய்கிறார். சூரியன் ஏறிவரும் தேருக்கு ஒரே ஒரு சக்கரம்தான் உண்டு. அத் தேரை ஏழு குதிரைகள் இழுக்கின்றன. ஏழு குதிரைகளும் வெவ்வேறு வகையான ஏழு நிறம் கொண்டவை. இத் தேரை ஓட்டுகின்ற சாரதிக்கு அருணன் என்று பெயர். இவர் காலில்லாத நொண்டி. சூரியனுக்கு பரிதி அருக்கன், ஆதித்தன், பானு, ஞாயிறு, பகன், கனலி, கதிரவன், கமலநாயகன், வெங்கதிரோன், வெய்யோன், மார்த்தாண்டன், தினகரன், பகலவன் என்ற பெயர்களும் உண்டு.

சூரியனுக்கு உஷாதேவி, சாயா தேவி என்ற இரு மனைவிமார்கள். சனி, யமன், அசுவினி தேவர்கள், சுக்ரீவன், கர்ணன் ஆகியோர் புத்திரர்கள். யமுனை, பத்திரை ஆகியோர் புத்திரிகள். சூரியனை வணங்கினால் புகழ், மங்களம், உடல்நலம், ஆட்சித்திறம், செல்வாக்கு முதலியவற்றை கொடுப்பார். சூரியன் தன்னை வழிபடுபவர்களின் பகையையும் கவலைகளையும் போக்குவார். நினைத்த காரியங்களை முடித்து வைப்பார். மனதில் எப்படிப்பட்ட சஞ்சலங்கள் இருந்தாலும் மிகப்பெரிய ஆபத்து காலத்தில் அகப்பட்டுக் கொண்டாலும், தாங்கொணாத் துயர் தம்மை ஆக்கிரமித்துக் கொண்டாலும் சூரிய பகவானை வணங்கினால் அல்லல் அகலும், துன்பம் விலகும், ஜெயம் நல்கும்.

சூரியனை சிவப்பு நிற மலர்களால் அர்ச்சிப்பதாலும், சிவப்பு ஆடையை உடுத்திக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை விரதம் இருப்பதனாலும் சூரிய நமஸ்காரம் செய்து வருவதனாலும் கிரக தோஷங்கள் நீங்கும். சூரிய நமஸ்காரம் ஆரோக்கியத்தின் அஸ்திவாரம் ஆகும். அதிகாலையில் எழுந்ததும் கை, கால், முகம் கழுவி கிழக்கு திசை நோக்கி இரண்டு கைகளையும் தலைக்குமேல் குவித்து சூரிய பகவானை இதயத்தில் நிறுத்தி "ஓம் நமோ ஆதித்யாய புத்திர் பலம் தேஹிமே சதா" என்று மூன்றுமுறை கூறி வந்தால் சோம்பேறித்தனம் விலகும். மற்றும் அந்நாள் சுபதினமாக அமையும். உடலுக்கு உணவு முக்கியமாக இருப்பினும் அந்த உணவை சூரிய ஒளியே உற்பத்தி செய்கின்றது. தேவையான உயிர்ச்சத்து விற்றமின்டி சூரிய ஒளியில் இருந்தே இலவசமாக கிடைக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் காலையில் இறை வணக்கம், உடற்பயிற்சி என்பன சூரிய இளவெயிலிலே இடம்பெறும். புதிதாகப் பிறந்த குழந்தையைக்கூட பலம் பெற வேண்டும் என எண்ணெய் பூசி சூரிய இள வெயிலில் படுக்க வைப்பார்கள். வெயிலில் சென்றால் கறுத்து விடுவோம் என ஓடி ஒளியாது உள் உறுப்புக்கள் எல்லாம் சிறந்து விளங்கவேண்டும் என சிந்தித்து செயற்பட வேண்டும். எலும்புகள் பலம் பெறுவதற்கு சுண்ணாம்புச் சத்தின்

*தன்னம்பிக்கை இருக்குமளவுக்கு முயற்சியும் இருந்தால்தான் வெற்றி சாத்தியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டிற்கு இந்த சூரிய ஒளியே அவசியம். குறிப்பிட்ட காலங்கள் சூரிய ஒளியிலிருந்து மறைந்து வாழ்ந்தால் எலும்புகள் நெகிழ்வடைந்து நொருங்கி உடையும். இள வெப்ப நிலையோடு கூடிய நேரடி ஒளி உடலில் பட வேண்டும். அப்போதுதான் உடல் நன்கு சக்தியை உள்ளுறுஞ்சும். காலை மாலை வெயில் உடலில் நேரடியாகப்படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

சூரியஒளி பற்றாக்குறையினால் கண், இருதயம், நுரையீரல், சிறுநீரகம், நரம்பு மண்டலம், எலும்புத்தொகுதி என்ற உடலில் முக்கிய அவயவங்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின்றன. மற்றும் சூரிய ஒளி பற்றாக்குறையினால் ஆபத்தான கட்டிகள், மாரடைப்பு, மூட்டுவலி, கை கால் குடைச்சல், இதயநோய், நீரிழிவு, காமாலை, முடி உதிர்வு, கண்நோய், மன விரக்தி என்பனவும் ஏற்படுகின்றன. இதனாலே இன்று விநோத மருந்துகள் உட்கொள்ளும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நண்பகலில் கடும் வெயிலில் உலாவும்போது தலைக்கு நேரடியாக வெயில் தாக்குவதை தடுக்க வேண்டும். அந் நேரங்களில் அதிக குளுக்கோஸ் இழப்பு ஏற்படுவதனாலும் நீரிழப்பு ஏற்படுவதனாலும் அடிக்கடி இயற்கையான பானங்கள் அருந்த வேண்டும். காலையில் சூரிய உதயம் தொடங்கி பத்து மணிவரை நேரடியாக உடலில் வெயில் படும்படி உலாவலாம். மாலை மூன்றரை மணிக்குப் பின்னர் வெயில் உடலில் படும்படி உலாவலாம்.

காலை உதய சூரியனை சில நிமிடங்கள் கண்களால் நேரடியாகப் பார்த்து வருவதன்மூலம் கண்கள் ஆற்றல் பெறும். காலை சூரியன் அறிவு மற்றும் ஆற்றலையும் மாலை சூரியன் அழகினையும் கொடுக்கும்.

பரீட்சித்து மகாராஜா சூரிய பகவானை வழிபட்டு பேறுபெற்றார். இராமர் சூரிய பகவானை வழிபட்டு இராவணனை வென்றார். யுதிஷ்டிரர் தௌம்ய முனிவரிடமிருந்து "சூர்ய அஷ்டோத்தர சத நாம மந்திர மாலையை" உபதேசமாகப் பெற்று ஆதித்யனின் அருளால் தடையற்ற உணவு வழங்கும் அட்சய பாத்திரத்தைப் பெற்றார். ஸ்ரீ கிருஷ்ணரின் புதல்வன் சாம்பன் சூரியனை ஆராதித்து குஷ்டரோகத்திலிருந்து மீண்டான். மயூரகவி என்பவர் "சூரிய சதகம்" பாடி இழந்த ஆரோக்கியத்தைப் பெற்றார்.

இவ்வாறாக நாமும் சூரிய தேவனை வழிபட்டு எல்லாப் பேறுகளையும் பெறுவோம்.

## சூரிய தியானம்

செம்பருத்திப் பூநிறத்தன் திகழிரண்டு கரமுடையன்
அம்புயமா மலர்க்கையன் அழகுவளர் சிந்தூர
அம்பரத்தான் மாலையினான் அணிந்திடுசெஞ் சந்தனத்தான்
எம்பரன் சூரியனை இதயதியானம் செய்வாம்.

நன் மாணிக் கம்முதல நவமணியா பரணமுளான்
முன்மா வேழ் இழுக்கின் முந்திரத் தமர்த்திருப்பான்
பொன்மேரு மலை தன்னைப் போற்றுவல மாய்வருவான்
பன்மேனிச் சூரியனைப் பணிந்து தியானம் செய்வாம்.

*ஒருநாள் விடியும் என்று காத்திருக்காமல் இன்றே முடியுமென முயற்சி செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயல்

– திரு ***பொ. பாலேஸ்வரன்*** அவர்கள் –

சரவண பவவெ னும் நாமம்
இசை தரு முகமோ வது
அரகர கோச மருள் தரு நேச
மவன துமொழியோ
கர கர நமசி வாயகர கரநமசிவாய
சிவ னதுஓ மெனு மந்திர ஓ
வீர முருகன் மலர் களினம்சம்
ஆறு முக மென்னு மிதோற்றமோ.

சித்தமும் பவமு மீர்செயு மடலும்
வெற்று டல்அழி வதற்கா
மொத் தமும் இல்லை முழுவது மல்ல
மூச்சுடன் நின்று விட்டால்
அத்தமும் சிவமும் ஆழ்கட
லுள்ளே அமிழ்ந்திட வந்தாலும்
வெத்துடல் ஏழு பிறப்பிலும்
இங்கு வந்தது கிடையாது.

நொந்துடல் மேனிபு விதனில் வாழ
நவமது ஓட்டை திறந்திடல் வேண்
சந்தமும் நிதி யமும் தோன்றுமுடல்
கையில் கிடைப்பது கிடையாது
எந்த மும்சொந் தமும் வந்திடல்
வேண்ட வகுப்ப தேதுமில்லை
பந்த மும்பாவ மும் பங்கொன்று
கேட்டால் பாதியில் நிறைவேது.

விழி தனில் ஒளியும் இருந் திட
நாளும் மிருதர மழுத்திவிடல்
பழுத டையாமல் பார்த் திட
மேலு மும்முறை மூடித் திறந்திடில்
விழியி னில் தடங்கல் மேதுமில்
லாது நடந்திட வழி தேடு
குழி யினில் வீழ்தல் விழிதனில்
நோய் தவிர்த் திடல் நன்றே.

*திறமையும் நம்பிக்கையும் இருந்தால் கண்டிப்பாக வாழ்வில் ஜெயிக்கலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதய நோயை விரட்டிட ஒரு
நாசி மூடி மறுநாடி வளியேற்று
கருதிய இயல்பு கருவினி லேந்து
மருவிய விடயம் பணியுண்டு
சுரு மதிய தனும் சுகமதி
நினைவு உடல் வெட நன்று
வருமதி யுணர்வு யெகத் தினி
நின்று காத்திடு நம துடம்பு.

ஒன்பது வாசல் மூடிட நினைக்கின்
முழுதுடல் கனல் தேடும்
அன் புடல் மீது அனல்பட நினைக்
கின் அறு துயர் வீடேகும்
சென்றிடு முடலது சமர சமதேடு
மிடம துசாம் பராகும்
நின்றி டுமிடமெ லாம் துணை
படு நால் வரெலா மிட மேகும்.

கையெ லாம் மூட்டுடன்
கால துடன் முடக்கும்
வை யது மெட்டும் தூரமது கை
முடக் கறுக்கும் பச்சிலை
விழி யது கண்டு நடு விரல்
கொண் டது வதைப் பற்றி
வழ மைகொண்ட மனையி னில்
ஏகும் ரசமது முடக் கறுக்கும்.

கண் விழி துஞ்சு மடல் விழி
கெஞ்சு மனதி னில் தூக்க
பெண் விழி மிஞ்சு கை விரல்
கொண்டு மிமை தனில் மைசேர
விண் கனல் கொண்ட விழி யது
பேச மொழி யது ஏது
மண் நிலமது நோக்கின் தண்
குளிரென நனையு மது விழியேத்தும்.

*எதையும் பெரிதுபடுத்தாமல் பழகிவிட்டால் வாழ்க்கை இனிமை தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத வாராந்த நிகழ்வுகள்

**04.10.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "முருக நாமத்தின் பெருமை"**

**வழங்குபவர் :- திருமதி விஜயகுமாரி முருகேசபிள்ளை அவர்கள்**

[ஆசிரிய ஆலோசகர்]

---

**11.10.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**"இன்னிசை"**

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**18.10.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)**

**வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்**

[ஆசிரியர்]

---

**25.10.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் ஐப்பசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :- திரு ஐ.கோ. சந்திரசேகரம் J.P அவர்கள்**

**மதிப்பீட்டுரை :- திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்**

**322ஆவது மலர்**

[சைவப்புலவர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org